296

ஜகன்மோகினி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14
18 AUG 1943
MADRAS

296

Jagan Mohini
The only Ladies Magazine in Tamil
Commands the LARGEST circulation among monthly journals

மோகினி இவ்விதழில் அளிக்கும் விருந்து
ஜகன்மோகன கோபலன்-14. தீராத விளையாட்டுப் பிள்ளை
திருக்குறள் ஸாரம். (முடிவு)
நல்ல துணை. (சிறுகதை)
ஸங்கமித்ரை (சரித்திர சிறுகதை)
அண்டாவும், அடுக்குச்சட்டியும் (சம்பாஷணை)
ஸ்த்ரீ எழுத்தாளர்கள்-6. ஸ்ரீமதி. ஸி. ஆர். ஸரோஜா
வை. மு. கோ. 61-வது நாவல் மதுரகீதம். (தொடர்ச்சி)

X
NZ21 N22834
18'2017
183021

Vol. 20. No. 7.
JULY 1943.

ஆனி

ஆசிரியை-
வை. மு. கோ[illegible]அம்ம[illegible]

ஸ்ரீராமஜயம்.

சுபானு ஸ்ரீ ஆனிமீ

ஜூலை 1943

மலர் 20 இதழ் 7

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. -வீராகவ கவி

July. 1943. Vol. 20. No. 7.

ஜகன்மோகினி

நிகரற்ற மாதப் பத்திரிகை

வருஷ சந்தா ரூ. 2 4

தனிப்பிரதி அணு 3

"மதுர கீதம்" ஆரம்பம் முதல்

சந்தாதாரராகச் சேர விரும்புவோர் ரூ. 1-14-0 முன்பணமனுப்பவும். (மார்ச் முதல் டிஸம்பர்வரை 10 இதழ்கள் 3 அணு வீதம்.)

இந்த சஞ்சிகையின் தொடர்ச்சி

உங்கள் ஊரில் கிடைக்காவிடில் உடனே அணு 15 மணியார்டர் அனுப்பினல் டிசம்பர் முடிவுவரை அனுப்பப்படும்.

உடனே அனுப்பவும்

சென்ற வருட ஆரம்பத்தில் சந்தா செலுத்துகையில் சிலர் இவ் வருஷத்தில் சில இத்ழகளுக்கும் சேர்த்து அனுப்பியுள்ளார்கள். அத்தகைய நண்பர்கள் இவ்வாண்டு முடிய டிஸம்பர்வரை சந்தா பாக்கித் தொகையை உடனே அனுப்பவும். (மாதத்திற்கு மூன்றணு வீதம்.)

அன்பர்கள் தயவுசெய்து கவனிக்கவும்

நமது சஞ்சிகையை ஒவ்வொரு மாதமும் இங்கிலீஷ் முதல் தேதியன்று எல்லா சந்தா நேயர்களுக்கும் அனுப்புகிறோம். முன்பணமனுப்பிய ஏஜன்டுகளுக்கும் அன்றே அனுப்பிவிடுகிறோம். சில ஏஜன்டுகள் பணத்தைத் தாமதமாக அனுப்புவதால் நாம் சஞ்சிகையை அனுப்பத் தாமதமேற்படுகிறது. இதைக் கவனியாது, அவ்வூரிலுள்ள வாசகர்கள் "ஏன் சஞ்சிகை தாமதமாக வருகிறது?" என்று எம்மைக் கேட்கிறார்கள். அவர்கள் தங்கள் ஊர் ஏஜன்டை காலாகாலத்தில் பணமனுப்பி சஞ்சிகையை முதல் தேதியே அடையும்படிச் செய்தல் நலமாகும்.

நமது நாவல்களின் விலைகள் 1—5—'43 முதல்

அதிகமாக்க நேர்ந்ததைப் பற்றி மே இதழிலேயே அறிவித்திருந்தும் சிலர் அதை கவனியாமல் பழைய விலைப்படி அனுப்புகிறார்கள். நேயர்கள் தயவுசெய்து புது விலைப்படி முன்பணமனுப்பி தபால் சேலவின்றி பெற்றுக் கொள்ளவும்.

பேபர் பஞ்சத்தின் காரணமாக சந்தா நேயர்களுக்குக் குறைந்த விலை முன் போல அளிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

சென்னை நேயர்கள்

தங்களுக்கு வேண்டிய புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் சென்னை ஆபீஸில் (26 தேரடி வீதி; திருவல்லிக்கேணி) அடியிற்கண்ட நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

காலை 9-30 வ... முதல் 3 வரை: மாலை 7 மணிக்கு

பி. ஸ்ரீ

ஆழ்வார்கள் கண்ட அழகுத் தெய்வம்

14. தீராத விளையாட்டுப் பிள்ளை

"பகவான் ஒரு தெய்வக் குழந்தை!" என்கிறார் கவி ரவீந்திரநாதர். "மேகக் கூட்டங்களினிடையிலும் மின்னி மறையும் ஒளி - நிழல் - கூட்டங்களிலும், கடவுள் ஒரு புதுமைக் குழந்தையாகச் சிரித்துக்கொண்டிருக்கிறார்!" என்றும் உறுதி கூறுகிறார்.

குழந்தையைத் தவழும் தெய்வமாகக் கொண்டாடும் கவிஞர்கள், தெய்வத்தையும் மண்ணிலும் விண்ணிலும் - இயற்கைப்பொருள்களில் எல்லாம் - தவழ்ந்து விளையாடும் குழந்தையாகக் கண்டு மகிழ்கிறார்கள். கடவுள் என்றும் குழந்தைதான்; என்றும் ஒரு புதுமைக் குழந்தைதான்! எங்கும் நிறைந்து விளையாடும் குழந்தைக் கண்ணன்தான்!

கண்ணனுடைய சிரிப்பும் விளையாட்டும் விசித்திர லீலைகளும் நமது நாட்டிலே எத்தனை கவியுள்ளங்களுக்கும் பக்தியுள்ளங்களுக்கும் விருந்தாக இருந்தன! இன்றும் எத்தனை உள்ளங்களுக்கு ஆறுதல் அளித்துவருகின்றன! ஆனந்தம் அளித்து வருகின்றன! ஆழ்வார்களைப் பரவசப்படுத்திய அந்த லீலைகள் பாரதியாரைப் போன்ற புதுமைக் கவிகளையும் வசீகரிக்கின்றன.

கண்ணனைக் குழந்தையாகவும், விளையாட்டுப் பிள்ளையாகவும் வருணிக்கிறார்கள். அந்த விளையாட்டுகளில் சிலவற்றை விஷமமாகவும் வருணிக்கிறார்கள். புத்திசாலித்தனமும் துஷ்டத்தனமுமுள்ள குழந்தைகளைப் போலவும் சிறுவர்களைப் போலவும் கண்ணன் விளையாடுகிறான். இந்த விளையாட்டுகளைப் பற்றிய கற்பனைகள் அளவுகடந்து பொங்குவதுமுண்டு. அவை குழந்தைகளின் மனோதத்துவத்தை - கள்ளங்கவடற்ற உள்ளத்தை - கலைச் சுவையும், பக்திச் சுவையும் தோன்றச் சித்திரிக்கின்றன. பல கிருஷ்ண லீலைகளும் ரஸிகர்களுக்கும் பக்தர்களுக்கும் ஒருங்கே கிடைத்த பொக்கிஷம்; சில கிருஷ்ண லீலைகள் பக்தர்களுக்கு ஏகபோகமாய்க் கிடைத்த புதையல்!

இந்த லீலைகளில் பிரசித்தமான ஒன்று, வெண்ணெய், நெய், தயிர், பால் முதலியவற்றைத் திருடியது. கண்ணனுக்கும் வெண்ணெய்க்கும் உள்ள தொடர்பு, கடவுளுக்கும் அன்பால் உருகும் உள்ளங்களுக்கும் உள்ள தொடர்பு போலே இந்தத் திருட்டுக் கதைகளைப் பாடுவதில், வருணிப்பதில், ஆழ்வார்களைப் போன்ற பக்த கவிகளுக்கு ஆனந்தம்; கேட்கும் பக்தர்களுக்கோ கர்ணாமிர்தம்.

வடமொழியில் **கிருஷ்ண கர்ணாமிர்தம்** என்ற ஒரு பிரபந்தம் உண்டு. அதிலுள்ள பல கவிகளிலும் நமது திவ்யப் பிரபந்தங்களின் பக்தி மணம் கமழ்கிறது; கலைச் சுவையும் பரிமளிக்கிறது. ஒரு கவியில் அந்த ஆசிரியர், திருட்டைக்

கண்டுபிடிக்க ஆய்ச்சியர் செய்த தந்திரத்தையும், தப்பி ஓடக் கண்ணன் செய்யும் தந்திரத்தையும் பிரஸ்தாபிக்கிறார். எட்டாத உயரத்தில் கட்டியிருந்த உறி, முக்காலிமேல் ஏறி நின்ற கண்ணனுக்கும் எட்டவில்லை! அதற்காகவே, களவில் பங்கு கொடுப்பதாக ஒரு தோழனையும் அழைத்துவந்தானாம் கள்ளக் கிருஷ்ணன். "அதனால் என்ன பயன்?" என்று நினைக்கிறீர்களல்லவா? முக்காலிமேல் தோழனை ஏறி நிற்கச் செய்கிறான். "அவனுக்கும்தான் எட்டவில்லையே!" என்கிறீர்களா? அவனை அப்படியே குனியவைத்து அவன்மேல் ஏறி நிற்கிறான் கண்ணன். உறியை எட்டிப்பிடித்துப் பாலை பருகுகிறான்! "சுத்த விஷமம்' என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா! ஆம்; சுத்தமான - கறந்த பால்போல் சுத்தமான - விஷமம்தான்!

வேறொரு சமயம். வெண்ணைத்தாழியைக் கைகள் துழாவிக்கொண்டிருக்கின்றன; ஆய்ச்சி தோன்றுகிறாள். ஒரு ருசிகரமான சம்பாஷணை நடைபெறுகிறது.

ஆய்ச்சி;—யார் நீ? குழந்தாய்!

கிருஷ்ணன்:—பலராமன் தம்பி.

ஆய்ச்சி:—இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

கிருஷ்ணன்:— இது என் வீடென்று தவறுதலாக வந்துவிட்டேன்.

ஆய்ச்சி:—ஏன் வெண்ணெய்த் தாழிக்குள் கை போட்டிருக்கிறாய்?

கிருஷ்ணன்:—எங்கள் வீட்டுக் கன்றுக்குட்டியைக் காணவில்லை. அது இங்கே இருக்கிறதா?—என்று தேடுகிறேன்.

இப்படிப்பட்ட விஷமப் பிள்ளையாகப் பரம்பொருளைக் கருதிய மனோதத்துவம் புறச்சமயிகளுக்கு எவ்வாறு புரியப்போகிறது? எனினும் அகில லோக நாயகனைப் புதுமை புதுமைகளான லீலைகளும் சேஷ்டைகளும் செய்யும் தெய்வக் குழந்தையாகப் பாவித்து வழிபட்டார்கள், இந்தியத் தத்துவ ஞானிகளும் கவிகளும் மகா கவிகளும், பண்டிதர்களும் பாமரர்களும். கிறிஸ்து பிறப்பதற்கு முன்னமே இத்தகைய வழிபாடு இந்தியாவில் காணப்பட்டது; நமது தமிழ் நாட்டிலும் ஆழ்வார்களின் காலத்திற்கு முன்பே வேரூன்றியது.

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதியார் பாடியிருக்கிறாரல்லவா? அந்த நூலில் உண்மையாகவே நெஞ்சை அள்ளும் சில பாடல்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகவும் பிரசித்தமான ஒன்று:—

> **"அறுபொருள் இவன்" என்றே அமரர்கணம் தொழுதேத்த'**
> **உறுபசி ஒன்(று) இன்றியே உலகடைய உண்டனையே!**
> **உண்டவாய், களவினால் உறி வெண்ணெய் உண்டவாய்!**
> **வண்துழாய் மாலையாய்! மாயமோ? மருட்கைத்தே!**

[அறுபொருள்=அற்றுத் தீர்ந்த பொருள்; அதாவது, பரம்பொருள். அமரர் கணம்=தேவர் கூட்டம். உறுபசி=மிக்க பசி. உலகடைய=உலகம் அடங்கலும். வண்துழாய்=வளப்பமான துளசி. மருட்கைத்தே=ஆச்சர்யமாகவும் மயக்கமாகவும் இருக்கிறதே!]

பரம்பொருள் என்று தேவகணங்களெல்லாம் ஒரு முகமாய்த் தொழுது ஏத்தும் புருஷோத்தமன் உலகங்களையெல்லாம் தன் வயிற்றிலே வைத்து ரட்சிக்கிறானாம். "உனக்கு என்ன அவ்வளவு பசியா? உலகம் அடங்க உண்டுவிட்டாயே! பாவம் ரொம்பப் பசியோ? அப்படி ஒன்றும் இல்லையே!" என்று பக்தர்கள் உருகுகிறார்களாம்,அந்த ஸர்வ சக்தியை நினைத்து நினைத்து."உலகம் உண்டவாய், களவினால் உறிவெண்ணெய் உண்டவாய்தான்!" என்று எண்ணிப் பார்த்ததும், உருக்கத்திற்கு அளவேயில்லை. ஸர்வ சக்தியின் சௌலப்பிய நாடகமல்லவா? "என்ன மாயமோ?" என்று மயங்குகிறார்கள்; ஆச்சரியப்படுகிறார்கள்.

என்ன ஆச்சரியமான பாட்டு! ஆழ்வார்-பாடல்களைப்போல் உருக்கமாகவும், லளிதமாகவும், ஸர்வஜன ரஞ்சகமாகவும் இருக்கிறதல்லவா? இந்தப் பாட்டைப் பின்வரும் திருமங்கையாழ்வார் பாசுரத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள்:-

**ஆழ்கடல்சூழ் வையகத்தார் ஏசப்போய், ஆய்ப்பாடி
தாழ்குழலார் வைத்த தயிர்உண்டான், காணேடீ!
தாழ்குழலார் வைத்த தயிர்உண்ட பொன்வயி(று),இவ்
ஏழுலகும் உண்டும் இடம்உடைத்தால்! சாழலே**

[குழல்=கூந்தல். உடைத்து=உடையது, ஆல்=அசை.]

ஏசப்போகிறார்களே! தெரியாதா? தெரிந்தும் அப்படிச் செய்வானேன்? அந்தக் கவலை அவனுக்கு இல்லை. அந்தக் காலத்திலே கோகுலத்தில் நடந்த அந்தக் களவு, உலகத்தார் எக்காலத்திலும் ஏசவேணுமென்றே போய்ச் செய்த காரியம்போலிருக்கிறதாம். உண்மைதானே: இக்காலத்திலும் அந்த விளையாட்டுப் பிள்ளையை—கள்ளக் கிருஷ்ணனை—ஏசுவோர் இல்லையா? அந்தத் தத்துவத்தை அறியாத புறச்சமயிகள் ஏசவில்லையா?

கண்ணனிடம் பக்திக் காதல்கொண்ட ஒரு பெண்மணியை நோக்கி மேலே சொன்னபடி ஒருத்தி சொல்லுகிறாளாம். அதற்குப்பதில் சொல்லுகிறாளாம் அவள்.

தயிர் உண்ட அந்த வயிறு தயிரைமட்டுமா உண்டது? தயிர், தயிர்க்காரி, "கள்ளப்பிள்ளை" யென்று ஏசினவர்-எல்லாரையும் உண்டதாம். அன்போடு வாய்குளிர ஏசினவர்களையும், பகைமையோடு வயிறு எரிய ஏசின சிசுபாலன் போன்ற அசுரர்களையும், விஷயம் புரியாமல், தத்துவம் தெரியாமல் ஏசுகிறவர்களையும் உண்டுவிட்டதாம். ஏசினவர், ஏசுகிறவர்,ஏசப்போகிறவர்-எல்லாரையும் உண்டுவிட்டதாம். ஆய்ப்பாடியோடு அகில உலகத்தையும் உண்டதாம் அந்தத் "தயிர் உண்ட பொன்வயிறு."

சிலப்பதிகாரப் பாட்டு, "உலகம் உண்ட அந்தப் பெருவாய்தான், வெண்ணெய் திருடி உண்ட இந்தச் சிறியவாய்!" என்று ஆச்சரியப்படுகிறது. ஆழ்வார் பாட்டிலோ, "அந்தத் தயிரும் வெண்ணெயும் திருடி உண்ட பொன் வயிறு உலகங்களையெல்லாம் உண்டபோதிலும் இன்னும் எவ்வளவோ இடம் வைத்துக்கொண்டிருக்கிறதே!" என்ற ஆச்சரியம்.

ஒரு பசியுமில்லாமல் உலகம் உண்ட ஆச்சரியம் சிலப்பதிகாரத்திலே "உலகங்களையெல்லாம் உண்டும் பசிதீர்ந்த பாடில்லையே; என்னபசி! ஆ, என்ன வயிறு!" என்று ஆச்சரியம் ஆழ்வார் பாட்டிலே.

ஆனல் என்ன விநோதமான பசி! என்ன விநோதமான ஜீரணம்! தனக்காகவா உண்ணுகிறான்? உலகங்களையெல்லாம் வைத்து ரட்சிக்கத்தான் சாப்பிடுகிறதாம் இந்த வயிறு. பழைய உலகம், புதிய உலகம். ஏசும் உலகம்; ஏசாத உலகம் - தோன்றிய உலகம், தோன்றுகிற உலகம், தோன்றப்போகும் உலகம், தோன்றாத உலகம்-எல்லாவற்றையும் வாரி உண்பது அவற்றையெல்லாம் ரட்சிக்கத்தானும். அப்படியே வெண்ணெய் உண்டதும், தயிர் திருடியும் கோபிகைகளின் உள்ளத்தையும் உயிரையும் திருடி உண்டு அவர்களை ரட்சிக்கத்தானும்.

வெண்ணெய் உண்டதும் மண்ணை உண்டதும், தயிரை உண்டதும் உயிரை உண்டதும் - பசியோ பசியில்லையோ? - அவனுக்குத் தீராத விளையாட்டு இந்தத் தீராதவிளையாத விளையாட்டே உலகரட்சை, உலக அழிவு,உலக சிருஷ்டி எல்லாம்.

பரம்பொருளின் என்றும் தீராத இந்த முத்தொழில் விளையாட்டும் கள்ளக் கிருஷ்ணன் வெண்ணெயைத் திருடியும் சிந்தியும், தயிரைக் கொட்டியும் உண்டும் விளையாடுவதுபோலத்தான்.

ஆக்கத்திற்காகவே அழிவு; அழிவுக்காகவே ஆக்கம்; ரட்சைக்காகவே—ஆக்கமும் அழிவும்—ஆ, ஆ, என்ன விளையாட்டு!

கருணையும் விளையாட்டே; காதலும் விளையாட்டே; அசுர சக்திகளைத்தீர்த்து உலகத்தைத் திருத்துவதும் குழந்தைக் கண்ணனின் விளையாட்டே. போரும் சமாதானமும் பயங்கரமான புரட்சிகளும் எல்லாம். இன்றும் என்றும்தான்.

இந்தத் தீராத விளையாட்டுப்பிள்ளையின் தீராத விளையாட்டிலே தீராத காதலும் இருக்கிறது,—நம்மையெல்லாம் ரட்சிப்பதற்காக.

அண்டாவும் அடுக்குச்சட்டியும்

அடுக்குச்சட்டி:—என்ன அண்டாவே! உடம்பு சரியில்லையா என்ன! அப்போது முதல் முனகுகிறீர்களே என்ன உடம்பு?

அண்டா:—உம்...உடம்பாவது, ஊறுகாயாவது? நீ சிறுசானதனாலே உனக்கு என்னைப்போல் அத்தனை கஷ்டம் தெரியவில்லைபோலிருக்கிறது. நான் வெகுகாலத்திய மனுஷி. என்னதான் ஜப்பான் சண்டை வந்தாலும் இப்படி வருஷக்கணக்கில் கோணிக்குள் அடைந்துகிடப்பதென்றால் யாரால் முடியும்? பாழாய்ப்போன ஜர்மனிக்காரன் சண்டையை ஆரம்பித்தபோதே நம்மை ஆளும் எஜமானுக்கள் நம் தலையில்தான் கையைவைக்கப் பார்த்தார்கள். எழவெடுத்த ஜப்பான்காரன் சண்டைக்குவந்தாலும் வந்தான். நம்மைத்தான் முதலில் சனியன் பிடித்தது.

ஜோடுதவலை:—வாஸ்தவம் அண்டாவாரே! உன் வாயிக்கு சக்கரைதான் போடவேண்டும். ஜப்பான்காரன் சண்டைக்கு வருவதற்கு முன்பே நம்மைத்தான் முதலில் குண்டுபோட்டுக் கொன்றுவிடுவானே என்ற பயத்தால் முதலில் நம்மைக் காப்பாற்ற கோணியிலும் ஜாதிக்காப் பெட்டியிலும், சிலர் வீட்டிலேயே பள்ளந்தோண்டி நிலவறை கட்டி அதிலும் புதைத்துவைத்தார்கள். கட்டை வண்டி சவாரி, லாரி சவாரி, பஸ் சவாரி, முதலிய பலவித சவாரிகள் செய்து ஒவ்வொருவர் ஒவ்வொரு பட்டிக்காட்டையடைந்து தபஸ் செய்கிறோம்.

அண்டா:—தபஸாமாச்சு, தக்காளிக்காயுமாச்சு. நான் பிறந்தநாளாக இதுவரையில் இந்த ஒன்னரை வருஷம்போல் அவதிப்பட்டு மூதேவியைப்போல் அடைபட்டதே இல்லை. அதுவே எனக்கு மிக்க விசனமாயிருக்கிறது. நான் பெரிய மனுஷியானதால் அடிக்கடி பெரிய கல்யாணங்களில் நூத்துக்கணக்கான வர்களுக்கு அன்னதானம் செய்ய ஈடுகொடுத்து சாதத்தைச் சம்பூர்ணமாகத் தாங்கி நிற்பேன். வெறும்நாளில் ப்ரதானமான அரிசியை நிரப்பிக்கொண்டு மங்களகரமாய் உட்கார்ந்திருப்பேன். சிலசமயம் பருப்புகளையும் தாங்குவேன். இந்த பாழாப்போன சண்டையின் காரணமாக ஒரு நல்லது உண்டா! ஒரு மேளசப்தம் காதில் விழுகிறதா! ஒரு லக்ஷ்மீகல்யாணப் பாட்டு கேட்கிறதா! என்னை முதல் முதல் என் எஜமானியம்மாளின் கல்யாணத்தில் பொங்கல் தவலையாக மஞ்ச குங்கும அலங்காரத்தோடு பாண்டுவாத்யம் முழங்க அழைத்துவந்தார்கள். அதுமுதல் நான் பார்த்த கல்யாணங்கள் கணக்குவழக்கில்லை. அத்தகைய மனுஷியை எலி நக்கவும், துறிஞ்சல் முத்தமிடவும், பெருச்சாளி குலாவவும் வைத்தால் என்மனது எப்படித்தான் தவிக்காது?

கோகர்ணம்:—அண்டா பாட்டி! நீர் சொல்வது மிகவும் உண்மைதான். நாங்களெல்லாம் சில்லுண்டிகள். அப்படியிருக்கும்போதே இந்தமூதேவிவாழ்க்கை பிடிக்கவே இல்லை. சண்டை என்கிற வார்த்தை வருவதற்குமுன்பே நம்மைத்தானா மூட்டை கட்டவேண்டும்? நம்மை பட்டாளத்திற்குத்தான் யுத்தம் செய்ய அனுப்புகிறார்களோ என்றுகூட எண்ணினேன். "எல்லாம் கிடக்க எருதுக்கு சீமந்தமாம். கன்னுகிடக்க கிழவனுக்கு கல்யாணமாம்" என்பதுபோல் ஊருக்குமுன்னால் நம்மையும் நம் இனத்தாரையும் இப்படிப்பட்ட பட்டிக்காட்டில் அடைத்துவிட்டு எஜமானர்கள் என்னவோ பட்டணவாஸத்திற்குப் போய்விட்டார்கள். நாம் அழகாக அலங்கரித்துவந்த இடங்களில் சட்டியும் பானையும் கல்சட்டியும் ஐயையே!... சகிக்க முடியாத கோரமாக உட்கார்ந்திருக்கின்றன.

கங்காளம்:—அதுமட்டுமா! நமக்கும் மேலான வெள்ளியார்கள் மட்டும் இரண்டொருவரை கூட அழைத்துப்போயிருக்கிறார்கள் சிலர். சிலர் அதற்கும் பித்தளை, பீங்கான், கண்ணாடி முதலியதை உபயோகிக்கிறார்களாம். தினம் ஒன்று உடைவதும் ஒன்றுக்கு மூன்றுவிலை கொடுத்து வாங்கித் திண்டாடுகிறார்களாம் சண்டையும் காணம் குண்டையும் காணம். ஏன் நம்மை அழைத்துப் போகக்

ஸ்ரீமதி கமலா பத்மநாபன்

நல்ல துணை !

எனக்கு விவாகமாகி நான் சம்சாரம் செய்ய ஆரம்பித்த நாள்முதலே எனது வயோதிக மாமியார் என்னிடந்தான் இருந்துவருகிறார். ஒவ்வொரு குடும்பத்திலும் இதுமாதிரி வயதானவரும் அனுபவசாலியுமான ஒரு ஸ்த்ரீ இருந்தால் எத்தனையோ விதங்களில் அனுகூலமாய்த்தான் இருக்கிறது.

உதாரணமாய், கைக்குழந்தைக்கு ஜுரமோ ஜலதோஷமோ வந்தது என்று வைத்துக்கொள்ளுங்களேன். அப்பொழுது வீட்டில் ஒரு வயதுமுதிர்ந்த அனுபவம் வாய்ந்த ஸ்த்ரீ இருக்கும்பக்ஷத்தில் "டாக்டருக்கு 'போன்' செய்வோமா ? ஷாப்பிலிருந்து மிக்சர் தருவிப்போமா ? அந்தப்பாவி டாக்டர் பச்சைக் குழந்தைக்குப்போய் இஞ்ஜெக்ஷன் கொடுக்கவேண்டும் என்கிறானே !" என்று இப்படி பலவிதமாய் புலம்பித் தவிக்கவேண்டிய அவசியமே நமக்கு ஏற்படாது. வீட்டுப் பெரியம்மாவிடமிருந்து 'கொஞ்சம் சுக்கையும் மிளகையும் தட்டிப் போட்டுகஷாயம்வைத்து ஒரு பாலாடை காரசாரமாய் கொழந்தைக்குப்போட்டுடீ' என்றோ அல்லது "நெத்திக்கு, பச்சைக்கற்பூரத்தையும் குங்குமப்பூவையும் இழைத்துக் கொதிக்கவைத்து பத்துப்போடேன்டீ" என்றோ உத்திரவுபிறக்கும். நாமும் நம்பிக்கையுடன் அவ்வுத்திரவுகளுக்குக் கீழ்ப்படிந்தால் குழந்தையின் ஜலதோஷமும் ஜுரமும் ஓட்டம் பிடிக்காதா ? ஆத்துப் புருஷாள் எங்கேயாவது வெளியூர் செல்லும்படி நேரிடுகிறது. அப்பொழுது வீட்டிற்குப் பெரிய துணையாக நம் மாமியாரோ, பாட்டியோ இருந்துவிட்டால் சிறிசுகளாகிய நாம் நிர்ப்பயமாயிருக்கலாமல்லவா ?

என் கணவருக்கு மாதத்தில் இருபது நாட்கள் "ஸர்க்யூட்" போகும்படியான வேலை. என் மாமியார் எப்பொழுதும் பெரிய துணையாக என்னிடம் இருந்துவந்தது எனக்கு எவ்வளவோ நிம்மதியாகவும் கவலையற்றும் இருந்தது. இந்தக் காலத்தில் புதிதாக இல்வாழ்க்கையை மேற்கொள்ளவிருக்கும் பெண்மணிகளில் அனேகர் தம் கணவன்மார்களைப் பார்த்து "முதலில் உங்கள் கிழட்டு அப்பா, அம்மா வேறையாய் வசிக்க அவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்துவிட்டு வாருங்கள். பிற்பாடு நான் உங்களுடன் குடித்தனம் செய்யவருகிறேன்" என்று கூறுகிறார்களே ! இதில் என்ன சுகமும் நலனும் இருக்கும் என்று எனக்கு ஆச்சர்யமாகவே இருக்கிறது.

ஒரு சமயம் என் மாமியார் என்னைவிட்டுப் பிரிந்து ஏதோ முக்கிய அலுவல்களின் நிமித்தம் வெளியூருக்குப் போகும்படி நேர்ந்தது. புறப்படுவதற்கு ஐந்தாறு நாட்கள் முன்னாலிருந்தே என்னைத் தனியாய்விட்டுச் செல்லவேண்டுமே என்ற பலமான யோசனை அவரைப் பிடித்துக்கொண்டுவிட்டது.

தன் மகனைப் பார்த்து "ஏண்டாப்பா! உன்னுடைய "ஸர்க்யூட்" வேலையை ஒருவாரத்திற்கு நிறுத்திவைக்க முடியாதா ? இவளை ஒண்டியாய் விட்டுவிட்டு ஊருக்குப்போக எனக்கு மனசு கேட்கவில்லையே ! பகலெல்லாம் எப்படியாவது கழித்துவிடலாம். ராத்திரி வேளையில் சின்னஞ்சிறு பெண் எப்படியப்பா தனியாக இருக்கமுடியும் ? ஒரு வேளைபோல இருக்குமோ ?" என்று கேட்டார்.

அவர் சிரித்துக்கொண்டே "பேஷ், நன்றாய்ச் சொன்னாய் அம்மா ! உன் நாட்டுப் பெண்ணுக்காக என்னுடைய "டூரிங்" வேலையை நிறுத்த முடியுமா ? தனிமையாக இருக்க அவளுக்கும் வழக்கம் ஆகவேண்டாமா ? எத்தனை நாளைக்குத்தான் அவள் இப்படி பச்சைக் குழந்தையைப்போல் ஒருவர் பாதுகாப்பில் இருக்கிறது? உனக்கு மனசு கேட்காவிட்டால் ஒரு மண் மாமியார் வேண்டுமானால் செய்து உன் நாட்டுப் பெண்ணுக்குத் துணையாக வைத்துவிட்டு ஊருக்குப்போ" என்று வேடிக்கையாக பதிலளித்தார்.

"நல்ல பிள்ளை ! எந்த விஷயத்திலும் இவனுக்குக் கேலிதான். அவன் கிடக்கிறான், பத்மா! நான் கோடியாத்து கோமதிப் பாட்டிக்கு சொல்லிவிட்டுப்

போகிறேன். உன் ஆம்படையான் ஊரில் இல்லாதபொழுது, நம் ஆத்தில், ராத்திரி வேளையில், அவளை உனக்குத் துணையாக வந்து படுத்துக்கொள்ளச் சொல்லுகிறேன். வயதானவள்; நல்ல துணை. அசட்டு தைரியத்துடன், ராத்திரிக்காலத்தில், அவனும் ஊரில் இல்லாதபோது பொம்மனாட்டித் துணையில்லாமல்மாத்திரம் இருக்காதே! நம்ப வீராசாமி நாலுவருஷமா பழகிய ஆள்தான். இருந்தாலும் இந்த வேலைக்காரர்களின் புத்தியெல்லாம் எந்த நிமிஷம் எப்படி மாறுமோ, யார் கண்டார்கள்? குழந்தையை பத்திரமாய் பாத்துக்கோ'' என்று எனக்கு இன்னும் பலவித புத்திமதிகள் கூறிவிட்டு, கோடியாத்து கோமதிபாட்டியிடமும் சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார் என் மாமியார்.

மாமியார் புறப்பட்டுச் சென்ற மூன்றும் நாளே என் கணவரும் அவரது "ஸர்க்யூட்'' வேலையின் நிமித்தம் எங்கள் ஊரிலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில் உள்ள ஒரு ஊருக்குப் புறப்பட்டுப் போனார். சாதரணமாய் நான்கு நாட்கள் பிடிக்கக்கூடிய அந்த வேலையை என்பொருட்டு இரண்டே தினங்களில் முடித்துக்கொண்டு கூடிய சீக்கிரம் திரும்பிவருவதாகச் சொல்லிப்போனார்.

அன்று மாலையே நான் என் மாமியார் எனக்குப் படித்துப் படித்துக் கூறியிருந்தபடி, கோமதிப்பாட்டியை ராத்திரி துணைக்குப் படுத்துக்கொள்ள வரும்படி சொல்லியனுப்பினேன். இரவு9 மணி சுமாருக்கு கோமதிப் பாட்டி ஒரு ஜமக்களத்தையும் கம்பளியையும் சுருட்டிக்கொண்டு வந்துசேர்ந்தாள்.

"கொழந்தை எங்கேடீ? தூங்கிப்போயிடுத்தா? இருந்தாலும் ஒங்க மாமியார் குணம் யாருக்குவரும்? 'பாட்டீ' எம்மாட்டுப்பொண்ணை கவனிச்சுக்கோங்கோ, அவ தனியாயிருப்பது இதான் மொதல் தடவை, பிள்ளையாண்டானும் "சர்கோட்'' போயிடுவான். ஒங்களை நம்பிதான் எம்மாட்டுப்பெண்ணை தனியாவிட்டுப் போறேன்னு எங்கிட்டே நூறுதடவை சொல்லிட்டுப் போனா'' என்று பேசிக்கொண்டே நான் படுத்துக்கொள்ளும் அறையின் வாசற்படி அருகில் தன் படுக்கையைப் பிரித்துக்கொண்டாள் கோமதிப்பாட்டி.

"பாட்டீ, ஒரு தலையணை கொடுக்கட்டுமா?'' என்று நான் கேட்டேன்.

"ஹூம்! நான் கெட்டகேட்டிற்கு தலைகாணி வேறையா? ஒண்ணும் வாண்டாம், இந்த வாசப்படிமேலேயே தலையெவச்சுப் படுத்தாப் போச்சு! ஹரே ராமா! கிருஷ்ணா! கோவிந்தா! என்னப்பனே!'' என்று பகவந் நாமங்களை ஸ்மரித்தவண்ணம் தலையை வாசற்படியின்மேல் சாய்த்தாள் பாட்டி.

பாட்டியின் வெண்கலத் தொண்டை தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தையை எழுப்பிவிட்டது. விழித்துக்கொண்டு அழத் தொடங்கிய குழந்தையை எடுத்து சமாதானம் செய்து அதற்கு பத்து மணிக்கு கொடுக்கவேண்டிய பாலை ஒன்பது மணிக்கே புகட்டிவிட்டு மறுபடியும் தொட்டிலில்விட்டு தூங்கப் பண்ணினேன். பாட்டி வாய் ஓயாமல் ஏதேதோ ஊர்க்கதையெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தாள். நான் வெறுமனே "ஊம்'' கொட்டிக்கொண்டிருந்தேன்.

குழந்தை தூங்கியபிறகு நான் கைவிளக்கை எடுத்துக்கொண்டுபோய் உள் எல்லாம் பார்த்து மூடிவிட்டு, வீதிக் கதவைத் திறந்து வராந்தாவில் வீராசாமி படுத்துக்கொண்டிருக்கிறானென்று பார்த்தேன். அவனும் அப்பொழுதுதான் ஓலைப்பாயை உதறிப் போட்டுக்கொண்டிருந்தான். பிறகு நான் முன்போல் வீதிக் கதவை சாத்தித் தாழ்ப்பாள் போட்டு என் அறைக்கு வந்து விளக்கை சிறிசாக்கி ஒரு மூலையில் வைத்துவிட்டுப் படுத்துக்கொண்டேன்.

"படுத்துண்டியாடிம்மா பத்மா? கதவெல்லாம் நன்னாப்பாத்து மூடிண்டு வந்தயா? காலம் கெட்டுக்கடக்கு, ஊரெல்லாம் திருட்டுபயம் ஜாஸ்தியாயிருக்கு'' என்று ஆரம்பித்தாள் பாட்டி.

"எல்லாம் கவனமாய் பார்த்துவிட்டு பத்திரமாய் மூடிக்கொண்டுவந்திருக்கிறேன் பாட்டீ! ஒன்றும் பயமில்லை. போதாச்சே; தூங்குங்கோ'' என்றேன்.

'அது எப்படிடீ பத்துமணிக்கே தூக்கம்வரும்? சித்தெ பேசிண்டு இருந்தா தன்னேப்போலே தூக்கம்வந்துடறது. ஒனக்கு தூக்கம்வறதா என்ன?' என்றாள்பாட்டி.

எனக்கு உண்மையாகத் தூக்கம் கண்ணை இழுத்தது. ஆனால் பாட்டி அப்படி கேட்டவுடன் ஏதோ அசட்டுத்தனமாய், "இல்லை பாட்டி! எனக்கு இன்னும் தூக்கம் வரவில்லை. நான் தினம் பத்தரைமணிக்குப் பிறகுதான் தூங்குவேன்" என்று சரடுவிட்டேன். என் அசட்டுத்தனத்திற்கு தக்க பலனை பிற்பாடு அனுபவித்தேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

"ஏண்டி பத்மா! ஒன்னை ரொம்பநாளாக் கேக்கணும்கறது மறந்து மறந்து போயிடறது. ஒன்னும்படையான் "சர்க்கோட்" போறப்போ காட்டுலேயும் மோட்டுலேயும் கூடாரம் அடிச்சிண்டு வாசம் செய்யறுனுமே! நெசமாடீ? பயமா இருக்காதோ? போனமாசம்கூட ஏதோ ஒரு ஊரிலே சுடுகாட்டுக்குப்பக்கத்திலேயே 'முகாம்' போட்டுண்டு நாலுநாள் இருந்தான்னு எம் பிள்ளை சொன்னன். நெனச்சாலே பயமாக இருக்கே" என்று கேட்டாள் பாட்டி.

நான் "என்ன பயம் பாட்டீ? இவர் ஒருவர் மாத்திரமா போகிறார்? கூடவே வேண்டிய சிப்பந்திகளும் காவலாட்களும் போகிறார்களே! மேலும் ஒவ்வொருவரும் தற்காப்புக்காக துப்பாக்கி, தடி முதலிய ஆயுதங்களும் வைத்துக்கொண்டிருப்பார்களாம். பயப்பட்டால் சம்பளம் கொடுப்பார்களா?" என்றேன்.

"என்ன சம்பளம் வேண்டிக்கடக்கு! உசிர்போன திரும்பிவருமாடீ? துஷ்டமிருகங்களை வேணும்னு துப்பாக்கியாலே சுட்டுக்கொல்லலாம். சுடுகாட்டுலே இருக்கும் பேய் பிசாசுகளை யாரு என்ன செய்யமுடியும்? உன் ஆம்படையானே வாட்டசாட்டமாய் லக்ஷணமாய் இருக்கிற பிள்ளை! பேய் பிசாசுகள் இப்பேற்பட்டவாளைக் கண்டால் சும்மா இருக்கும்னு நெனச்சுண்டிருக்கே! கழுத்தெ முறிச்சு ரத்தத்தை ஒரே உறிஞ்சலாய் உறுஞ்சிவிடுமே! என்னமோம்மா! பேய் பிசாசு விஷயத்தில் மாத்திரம் அசட்டு தைரியம் காட்டக்கூடாது" என்றாள்.

இதைக் கேட்ட எனக்கு உள்ளூற உதறல் எடுக்க ஆரம்பித்துவிட்டது. எனக்கு திடீரென்று ஏற்பட்ட திகிலில் சற்றுமுன்பு கண்ணை அழுத்திய தூக்கம் கூட கலைந்துவிட்டது. மார்பு "படக், படக்" என்று அடித்துக்கொண்டது. என் யோசனையெல்லாம் வெளியூர் சென்றிருந்த என் கணவர்மேல் சென்றுவிட்டது. மனதில் சொல்லமுடியாத வேதனையும் கிலியும் உற்பத்தியாகிவிட்டது.

சிலவினாடிகள் மௌனம் சாதித்த பாட்டி மறுபடியும் தன் புராணத்தைத் தொடங்கிவிட்டாள். "மாயவரம் டெப்டி கலெக்டர் சேதுராமய்யர் பிள்ளை எப்படி செத்தான் தெரியுமா? ஒருநாள்..."

"ஐயோ, வேண்டாம் பாட்டி! அதெல்லாம் என்னத்திற்கு இப்பொழுது, இந்த ராத்திரிவேளையில்?" என்று ஆக்ஷேபித்தேன் நான்.

"ரொம்ப நன்னயிருக்குடீ! 'நெருப்புன்னு'வாய் சுட்டுப்போயிடுமா என்ன? என்ன சொல்லவந்தேன்னுக்க, சேதுராம அய்யர் பிள்ளைக்கு சாந்திகல்யாணம் ஆகி ஒருமாசம்கூட ஆகவில்லை. ஒருநாள் ராத்திரி வீட்டிலே ரொம்பப் புழுக்கமா இருக்குன்னு சொல்லி ஆத்தங்கரைக்கு உலாவப்போனனும், சித்தெக்கெல்லாம் வீடு திரும்பினதும் ரத்தரத்தமாய் வாந்தி எடுத்து காத்தாலே வேளைக்கு செத்தே போயிட்டான் பாத்துக்கோ! போன எடத்துலே பேய் அறையாதபோன ரத்த வாந்தி ஏதுக்குடீ எடுக்கறான்? கிளியாட்டமா பொண்டாட்டி அறுத்துப்போய் மூலேலே விழுந்து கடக்கு" என்றாள்.

இதைக் கேட்டபிறகு, ஏற்கனவே உப்பும் புளியும் போட்டுக் கரைத்துக் கொண்டிருந்த என் வயிற்றில் ஏற்பட்ட சங்கடமும் திகிலும் ஜாஸ்தியாகி விட்டது. உடம்பெல்லாம் வெயர்த்துக்கொட்டிற்று. "ஈச்வரா! என் கணவரை நல்லபடியாகக் கொண்டுவந்து என்னிடம் சேர்த்துவிடு" என்று பகவானை மனதிற்குள் வேண்டிக்கொண்டேன்.

பாட்டி திடீரென்று "இதென்னடீ பத்மா! வாசல்லே ஏதோ "கொர்" "கொர்"னு சத்தம் கேக்கறதே!" என்றாள்.

நானும் உடனே தலையைத் தூக்கி சற்று உற்றுக் கேட்டுவிட்டு "ஒன்றுமில்லை பாட்டி, எங்காத்து ஆள் வீராசாமி வீதித் திண்ணையில் படுத்துக்கொண்

டிருக்கிறன். அவன் விடும் குறட்டையின் சப்தம்தான் அது'' என்றேன்.

"ஏதுக்குக் கேட்டேன்னு, எங்காத்துவர் சாகறத்துக்கு முன்னடி இரண்டு நாள் நெனவே இல்லாமெ கடந்தார். அவர் தொண்டேலேந்து இதேமாதிரிதான் "கொர் கொர்"னு சத்தம் வந்துண்டு இருந்தது. என்னடாப்பான்னு பார்த்தேன். ஏண்டி, நெசமான கொறட்டைதானே! இல்லாபோனு வீராசாமியும் சீட்டுக் கிழிக்கப்பாக்றுனோடீ!'' என்று சந்தேகப்பட்டுக்கொண்டே கேட்டாள் பாட்டி. அப்பொழுது உண்டாகி இருந்த திகிலேயும் கவலையையும்கூட மறந்து பாட்டியின் கேள்வியைக் கேட்டு பலமாய் சிரித்துவிட்டேன். பிறகு "இல்லே பாட்டீ, அவன் எப்பொழுதும் குறட்டைவிடுகிறதே அப்படித்தான்'' என்றேன்.

"சிறிசுகளுக்கெல்லாம் சிரிப்பாய்த்தானிருக்கும். பட்டு அனுபவிச்சவாளுக்குன்னு தெரியும் இதெல்லாம், செத்துப்போகறத்துக்கு பத்து நிமிஷம் முன்னடி எங்காத்துக்காரருக்கு கண் முழி உள்ளே சொருகிண்டு, வாய் ஒரு பக்கமாய் கோணிண்டு இழுத்துதே! அதெ நெனச்சுண்டா எனக்கு இப்பக்கூட நடுக்கம் தான்! உச்! இரு, இரு! கேப்போம். அதென்ன கத்தறது இப்படி! கோட்டானு, ஆந்தையா தெரியல்லேயே!'' என்று என்னை மௌனமாக இருக்கும்படி எச்சரித்துவிட்டு, தூரத்திலிருந்து வெளிப்பட்ட ஒரு ராப்பக்ஷியின் கூவலே செவி சாய்த்துக் கேட்டாள் பாட்டி.

இதற்குள் தொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை திடீரென்று வீறிட்டு அழ ஆரம்பித்தது.

"பத்மா, கொழந்தெயெ எடுத்துக்கோடீ சட்டுனு! கோட்டான் கத்தறதே வீட்டுக்கிட்டெ! ஆகவே ஆகாது! இதென்ன அபசகுனம்? யார் வீட்டிலே எழவு வரப்போறதோ!'' என்று புலம்பத் தொடங்கினள் பாட்டி.

நான் குழந்தையை எடுத்துக்கொள்ள எழுந்திருக்கப்போனேன். என்னல் எழுந்திருக்கவேமுடியவில்லே! தேகம் முழுவதும் மலேயாய் கனத்தது. தலேயிலும் ஒருவித பாரம்! கண்களில் எரிச்சல்! மெதுவாய் சமாளித்துக்கொண்டு படுக்கையைவிட்டு, கவிழ்ந்தபடி, சற்று முன்னல் நகர்ந்து தொட்டிலே எட்டிப் பிடித்து ஆட்டிவிட்டேன். குழந்தையின் அழுகையும் சிறுகச் சிறுக அடங்கிக் கொண்டேவந்தது.

நான் எழுந்திருக்கவில்லே என்பதை அறிந்துகொண்ட பாட்டி "ஏண்டீ, தூக்கத்திலே பயந்துண்டு கத்தற கொழந்தையை கையிலெ எடுத்துவச்சுண்டு சமாதானம் பண்ணமாட்டயோ! தொட்டிலெப் பிடிச்சு ஆட்டினுப் போருமா? பயத்திலெ நாளேக்கு ஜொரம் கிரம் வந்துட்டா அப்பறம் நீதானே அவஸ்தைப்படணும்'' என்று எனக்கு புத்தி கூறினள்.

என்னல் படுக்கையைவிட்டு எழுந்திருக்க முடியவில்லேயென்று பாட்டியிடம் வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ள எனக்கு வெட்கமாக இருந்தபடியால் பேசாமல் மௌனம் சாதித்தேன். சிறிது நேரத்தில் குழந்தையும் தூங்கியது.

கடியாரத்தில் மணி பன்னிரண்டு அடித்ததை எண்ணினேன். பாட்டியிடமிருந்து பேச்சு ஒன்றும் கிளம்பாதபடியால் தூங்கிவிட்டாள் என்றே நினைத்தேன், எனக்கு என்னமோ தூக்கமே வரவில்லே. மனதில் என்றைக்கும் ஏற்படாத பயமும் முட்டாள்தனமான யோசனைகளும் எழும்பி என்னைக் கலவரப்படுத்தின. கோட்டானின் பலரகப்பட்ட விசித்திரமான கூவல் வேறு வெகு சமீபத்திலேயே கேட்டபடியால் என் நெஞ்சும் மார்பும் அடித்துக்கொண்டது.

"கேட்டயா பத்மா கோட்டான் கத்தறதை? 'வெட்டிப்பொதை! குத்திச் சுடு!'ன்னு எத்தனை ஸ்பஷ்டமா அது சொல்றது பார். நம்ம தெருவுலெ யாராத்துலேயோ கட்டாயம் ஒரு சாவு ஏற்படப்போறது! கிழம் கட்டைகளாப் பாத்து அந்த யமதர்மராஜன் கொண்டுபோனுத் தேவலே! சின்னஞ் சிறிசுகளேத்தானே அவன் எப்போதும் வாறிண்டு போயிடறுன்'' என்று அங்கலாய்த்தாள் பாட்டி.

அவ்வளவோடு ஓய்ந்துவிட்டாளா பாட்டி? தன் தமக்கை பெண்ணிற்கு பேய்பிடித்து ஆடின வைபவத்தையும், தன் ஓர்ப்படி பிள்ளே வயிற்றுவலி தாங்

காமல் ஆத்து புழக்கடை மாமரத்தில் தூக்குப்போட்டுக்கொண்டு இறந்ததையும், பிற்பாடு அவனுடைய ஆவி வீட்டைச்சுற்றி அலேந்ததையும், தான் கர்ப்பிணியாக இருந்தபொழுது புளியமரத்துப் பிசாசைப் பார்த்துவிட்டு மயக்கம் போட்டு கீழே விழுந்ததினுல் தனக்கு குறைப்பிரசவம் ஆனதையும், குலேநடுக்கம் எடுக்கக்கூடிய பயங்கரமான வர்ணனேகளுடன் விவரித்துக்கொண்டே போனுள். என்னுல் பொறுக்கமுடியவில்லே, "நல்ல துணே வந்து சேர்ந்தாள்! தனியாய்ப் படுத்துக் கொண்டிருந்தாலே நான்பாட்டில் நிம்மதியாய் தூங்கியிருப்பேனே!" என்று நினேத்துக்கொண்டேன்.

"பாட்டீ! தூங்குங்கோ, மணிரொம்ப ஆயிடுத்து. எனக்கும் தூக்கம் வரு கிறது" என்று நடுங்கும் குரலில் கூறிவிட்டு போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு கண்களே இறுக மூடிக்கொண்டேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் பாட்டியிடமிருந்துவந்த பலவிதமான சப்த ஜாலங் களுடன் கூடிய குறட்டையிலிருந்து அவள் தூங்கிவிட்டாள் என்று அறிந்தேன். அந்தமட்டும் சந்தோஷம்தான். ஆனுல் என் மனதில் குடிகொண்டிருந்த பீதியை யும் விபரீத யோசனேகளேயும் தவிர்க்கமுடியவில்லேயே! கண்களே எவ்வளவு இறுக்கி மூடிக்கொண்டால் என்ன? உறுத்தல் எடுத்ததே தவிர தூக்கம்மாத்திரம் வரவில்லே! புரண்டு புரண்டு படுத்து உடம்பெல்லாம் வலி எடுத்தது. பொழுது எப்பொழுதுவிடியும் என்று தவியாய்த் தவித்தேன். என் கணவர் ரத்த வாந்தி எடுப்பதுபோலவும், தலேமயிரை விரித்துக்கொண்டு பெரியமுழிகளுடன் கூடிய ஒருபயங்கர உருவம் என்னே ஓங்கி அறைய ஓடிவருவதுபோலவும், கற்பனேத் தோற்றங்கள் பல என் மனக்கண்ணின் முன் உதித்து என்னேச் சித்திரவதைக்கு உள்ளாக்கின, பிறகு எப்பொழுது கண்ணயர்ந்தேனே எனக்குத் தெரியாது.

நான் கண் விழித்தபொழுது, வீட்டு வேலேக்காரி குழந்தையை எடுத்து வைத்துக்கொண்டு அதன் அழுகையை சமாதானம் செய்துகொண்டிருந்தாள். என் படுக்கையின் அருகே கோமதிப்பாட்டி குனிந்துகொண்டு நின்றிருந்தாள். என்னேப் பார்த்து "இன்னுமாடீ தூக்கம் பத்மா? கொழந்தை கத்து கத்துன்னு கத்தறதே! விடிஞ்சு ஒரு நாழியாச்சு! கொழந்தைக்கு வயத்தைப் பசிக்காதோ! நான் ஆத்துக்குப்போயிட்டு ராத்திரி படுத்துக்க வறேன்" என்று சொல்லிக் கொண்டே போய்விட்டாள்.

எனக்கு நல்ல ஜுரம் காய்ந்தது. படுக்கையைவிட்டு எழுந்திருக்கவேமுடிய வில்லே. வேலேக்காரியிடமே சொல்லி கொஞ்சம் பாலேக்காய்ச்சி குழந்தைக்குப் போட்டச்செய்தேன்.

வீராசாமியைக் கூப்பிட்டு "காம்ப்" (Camp) போயிருந்த என் கணவருக்கு, உடனே புறப்பட்டு வரும்படி "போன்" செய்யச்சொல்லிவிட்டு அவருடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அவருக்கு சமாசாரம் எட்டி, பஸ் ஏறி வீடுவந்து சேருவதற்குள் மாலே ஆறு மணி ஆகிவிட்டது. அதற்குள் என் மனம் பட்டபாட்டை கடவுள்தான் அறிவார். வீடுவந்து சேர்ந்த வுடன் என் படுக்கை அருகில் வந்து நின்று பரிவுடன் என் உடம்பைப்பற்றி விசாரித்த என் கணவர் உயிரோடுதான் என் கண்முன்னுல் நிற்கிருர் என்பதை அறிந்தபிறகுதான் என் மனதிற்கு சாந்தி பிறந்தது.

எனக்கு இப்படி திடீரென்று ராத்திரி ஜுரம்வந்த காரணத்தை அவரிடம் விவரமாய் கூறிவிட்டு சிரித்தேன். அவரும் சிரித்துக்கொண்டே "அம்மா உனக்கு நல்ல துணே ஏற்பாடு செய்துவிட்டுப்போனுள்! ஊரிலிருந்து உடனே திரும்பி வரும்படி அம்மாவுக்கு தந்தி அடிக்கிறேன்" என்ருர்.

நான் இந்த கட்டுரையை முடிக்கும் முன்பு இன்னெருதடவை, ஒவ்வொரு வர் வீட்டிலும் வயதானவரும் அநுபவசாலியுமான ஒரு ஸ்திரீ இருந்தால் பல

விதங்களிலும் அனுகூலமே, என்று அழுத்தம் திருத்தமாய் கூற விரும்புகிறேன். ஆனால் கோமதிப் பாட்டியைப்போல் ஒருத்தியைமாத்திரம் கிட்டக்கூட அண்ட விடாதீர்கள்! அதைப்போல ஆபத்து சிறிசுகளுக்கு—அதுவும் கோழை மன துடைய பெண்மணிகளுக்கு—வேறெதுவும் இல்லை.

''குகப்ரியை''

ஸங்கமித்ரை

நீலத்திரைக்கடல் ஓரம், ஒரு அழகிய கப்பல் புறப்படச் சித்தமாய் பாய் விரித்து நிற்கிறது. படகு வலிப்பவர்கள் சூரியாஸ்தமனத்திற்காகக் காத்திருப்ப வர்கள்போல அந்திவானத்தையும், மறைந்தவண்ணம் மேற்குத் திசை மகளைத் தழுவும் சூரியனையும் பார்த்தவண்ணம் நிற்கிறார்கள். காற்றை எதிர்நோக்கி நிற்ப வன்போல நாற்புறமும் சுழன்று சுழன்று பார்த்துக்கொண்டிருக்கிறான் மாலுமி.

மாலுமியைத் தவிரப் பத்துப் பதினைந்து பெயர்கள் அந்தப் படகிலே இருக் கிறார்கள். எல்லோரும் ஒரேவிதமான மஞ்சள்நிறமுள்ள ஆடை, மொட்டைத்தலை இவர்கள் யார்? அதோ கோடியில் ஒரு இளம்பெண், சுருண்ட குழலை வாரி உச் சந்தலையிலே முடிந்திருக்கிறாள். நீலக்கடலை வானவளையம் முத்தமிடும் அந்த திசையையே பார்த்து நிற்கிறாளே. இந்தச் சிறு பெண்ணுக்கு இதென்னவேஷம்! பிக்ஷுணிக்கோலம்! உலகத்தையே ஆளக்கூடிய ராஜ கம்பீர்யமும் முகத்திற் காணப்படுகின்றதே? என்று ஆச்சர்யப்படவேண்டியதில்லை. ஏன்? அவள் உண்மையிலேயே சக்ரவர்த்தி திருக்குமரிதான், ஸம்ராட் அசோக மன்னனது ஒரே புதல்வி, ஆனால், அவள் உலக சக்ரவர்த்தியாகிய ஸர்வேசுவரனுக்கே பணி செய்யப் புறப்பட்டுவிட்டாள்.

ஸம்ராட் அசோகனது ஒரே புதல்வன் மகேந்திரன். இருவரும் இந்த இள வயதிலேயே துறவு பூண்டு பௌத்த தர்மத்தைப் பிரசாரம் செய்யப் புறப்படு வானேன்? இந்தக் கேள்விக்கு விடை சொல்வது அவ்வளவு எளிதன்று, உலகிலே துறவறத்திற்கு வயது எது என்பது உண்டா? ஆம்! உண்டு. ஹிந்து தர்மத்திலே நான்காவதாகவே துறவறத்தை வகுத்தார்கள். ஏதோ சில பெரி யார்கள் அவதார புருஷர்கள் என்று நம்மால் போற்றப்படும் வெகு சிலர் இள மையிலேயே துறவு பூண்டதுண்டு.

ஆனால்—பெண்களில்—ஸங்கமித்ரையைப் போன்ற சின்னஞ்சிறு கிளி, சக்ரவர்த்தினியாகக் கூடியவள் இன்று உலகத்தையே துச்சமாய் மதித்து, சாவ கத்தை நோக்கிச் செல்லுகிறாள். இளங்கோ மகேந்திரனைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அசோகனது அந்த மணிமுடி அவனுடையதுதான். ஆனால் அதற்குமுன்பே, மகதநாடு ஒரு அரச சன்யாசியைக் கண்டதுண்டு. அவர்தான் குமார வீதசோகன், ஆனால் அவர் துறவு பூண்ட நிலை வேறு.

சக்ரவர்த்தி தேவானும்பிரிய அசோகன் கண்கள் பனிசோர மெய் சிலிர்க்க போதி விருக்ஷத்தை அவன் கையிலே, செங்கோல் ஏந்தி நாடாளவேண்டிய அந்த அருமை மைந்தன் கையிலே கொடுக்கிறான். அவன் வணங்கி அந்த தெய் வீகத்தருவை கைகளில் ஏந்தி நிற்கிறான். அவள் கரங்குவித்தவளாய்த் தமைய னோடு தானும் வணங்குகிறாள். முகத்திலே பெருமிதம். இத்தகைய வீரத் தந் தையின் மைந்தராய்ப் பிறந்தோமே என்ற ஆனந்தமோ!

அடுத்து நிற்கும் பிரணயினிதேவி, தலைகுனிந்தவளாய்க் கண்ணீர் பெருக்கு கிறாள். சுற்றிலும் நிற்கும் மந்திரி பிரதானிகள் யாவரும் ஆச்சர்யத்தினால் மலர்ந்த கண்களோடு திகைத்து நிற்கிறார்கள்.

கப்பல் புறப்படுவதற்கு இன்னும் ஒரு சாமம்தான் பாக்கி. ஆசார்ய உபகுப் தனார் இன்னும் வரக்காணோம். ஏனோ? மித்ரையின் கண்கள் அந்தக்

கூட்டத்தில் நாற்புறமும் துருவித் தேடின. அவள் தேடிய உருவம் அங்கே இல்லை. ஆம்! அவள் தேடிய அந்த உருவம் வேறு யாருமல்ல. கலிங்கநாட்டு இளங்கோ மிருகேந்திரன்தான் அவன். அந்த மகாவீரன் அவள் முன்னே வர விரும்பவில்லை. தான் விளையாட்டாய்ச் சொன்ன ஒரு சொல் இத்தகைய பெரும் செயலுக்கு ஆதாரமாகிவிடுமென்று அவன் நினைக்கவில்லை. என்றாலும் இந்த நிலையில் அவளைச் சந்திக்க அவன் மனம் துணியவில்லை. ஏன்? தன்னை நேரில் சந்தித்தால் அவள் நெஞ்சம் தளர்ந்துவிடுமோ! என்ற பயமும் அவன் உள்ளத்தே எழுந்தது. அவள் செய்கின்ற இந்த மாபெரும் பணியில் தனக்கும் பங்கு உண்டல்லவா? என்று எண்ணும்பொழுது இன்னதென்று விவரிக்க முடியாத பேருவகையால் அவன் உடல் பூரிக்கும். மறைந்துநின்று அவள் செல்வதைக் காணவிரும்பி, அடர்ந்த மரத்தினருகே நின்றிருந்தான் அவன்.

"அடிகள் இன்னும் வரவில்லையே" என்றாள் தேவிபிரணயினி.

அவள் நிமர்ந்து பார்த்தாள். ஆசார்ய உபகுப்தரும் (குமாரவீத சோகர்) அசோகனது தம்பியாகிய ராஜசன்யாசியும் மிகவும் மெல்லிய குரலில் ஒருவரோடு ஒருவர் பேசியவண்ணம் வருவது தெரிந்தது. அவள் சிந்தனைகள் நெடுந்தூரம் பின்னோக்கிச் சென்றன.

ஆம்! அப்பொழுது அவளுக்கு வயது பதினைந்து. இளமை என்னும் பூஞ்சோலையில் அடி எடுத்து வைத்திருந்தாள். இளங்கோ மிருகேந்திரன் அசோகனது தங்கை இந்திரையின் செல்வன். அன்றுதான் கலிங்கநாட்டிலிருந்து வந்திருந்தான். அன்று, அழகிய பூம்பொழிலில் அந்தி மயங்கும் நேரத்தில் அவர்கள் சந்திக்க நேர்ந்தது. விஷயத்தை வளர்த்துவானேன். நேரவேண்டியது தான் நேர்ந்தது. இந்த சம்பவங்கள் நினைவுக்குவர பழைய இன்பகரமான நினைவுகளால் அவள் மனம் சற்றே சலித்தது.

ஆம்! அவைகள் வெறும் கனவுதான். அன்று ஆசார்யர் என்ன சொன்னார்? வாழ்க்கையில் நேருகின்ற துன்பங்களினாலும், அன்றி வேறுவகையான சோதனைகளினாலும் உலகைத் துறப்பது துறவாகாது. பலர் அந்தச் சமயங்களில் தோன்றும் உணர்ச்சிகளின் மிகுதியினால் திடீரென்று துறவியாகிறார்கள். அதுவும் ஓரளவு நன்மைதான் என்றாலும், நிறைந்த இன்பத்தோடு கூடிய ஒரு சிறந்த வாழ்க்கையை ஒரு நொடியில் உதறினார் பகவான் ததாகதர் (புத்தர்). அதுதான் உண்மையான துறவு. அத்தகைய துறவிதான் பிறரால் பின்பற்றத்தக்கவன். அழுகியபழத்தை வீசி எறிவதுபோல, கசந்த வாழ்க்கையைத் துறப்பது துறவாகுமா? இல்லை. கசந்த வாழ்க்கையை எதிர்த்துப் போராடவேண்டும். என்றல்லவா சொன்னார்" என்று எண்ண அவள் கண்களினின்று கண்ணீர் மாலை மாலையாய்ப் பெருகி ஓடிற்று. "நமோபுத்தாய" என்ற சொற்களை அவள் வாய் முணுமுணுத்தது.

இடையில் நேர்ந்த ஒரு சிறு சந்தடியினால் அவள் கனவு கலைந்தது. ஆசார்ய உபகுப்தரும், குமாரவீத சோகரும் அவள் எதிரில் நின்றார்கள். மகேந்திரனும் சங்கமித்ரையும் இருவரையும் அடிபணிந்தார்கள்.

ஆசார்ய உபகுப்தர் பெருமூச் செறிந்தார். மித்ரை இந்த இளவயதிலே பிக்ஷுணியாவாளென்பதை அவர் கனவிலும் நினைக்கவில்லை. பழைய சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாய் இறகு முளைத்து எதிரே தோன்றின.

விவாகம் நிச்சயித்தாகிவிட்டது. விடிந்தால் கலியாணம். கலிங்கநாடே புரண்டு மகத நாட்டிலே குடியேறிவிட்டது எனலாம். இராமனுக்கு முடிசூட விரும்பிய அயோத்திபோலிருந்தது பாடலீபுத்ரம். அரண்மனை முழுவதும் ஒரே கோலாகலம். ஊர்முழுவதும் ஒரே ஆனந்தமயம். வீடுகளிலெல்லாம் மகர தோரணங்கள். வீதிகளெங்கும் பூப்பந்தல்கள். எங்கும் மங்கள வாத்யங்களின்

கோஷம். இந்த வைபவங்களுக்கிடையே அவளும் ஆனந்த வாரிதியில் ஆழ்ந்திருந்ததில் ஆச்சர்யமென்ன !

நல்ல நிலா, பளிங்கு மாடத்தில் அசோகனும் பிரணயினிதேவியும், ஆசார்யரோடு பேசிக்கொண்டிருந்தார்கள். அதையடுத்த மற்றொரு நிலா முற்றத்திலே மித்திரை தனது ஆருயிர்க் காதலனோடு ஏதேதோ விவாதித்துக்கொண்டிருந்தாள். கலகலவென்ற வெள்ளிமணிச் சிரிப்பு. தேவி பிரணியினி கன்னங்கள் குழிய "விடிந்தால் கலியாணம், என்னதான் பேசிச் சிரிப்பார்களோ?" என்றாள்.

"அம்மணி, அந்நாளிலே சிறைக்கூடத்திலே என் சீடனைச் சிறைபிடித்தீர்களே அப்பொழுது என்னதான் பேசினீர்களோ? ஞாபகமில்லையா?" என்றார் அந்தத் துறவி. இதிலிருந்து படிப்படியாய் உபகுப்தர் துறவு அவளுக்கு ஞாபகம் வந்தது. தன்பொருட்டே அவர் துறவுபூண நேர்ந்ததை எண்ணி நெடுமூச்செறிந்தாள். இந்த சமயத்தில் மிருகேந்திரனது கரங்களைப் பற்றியவளாய் வந்து எதிரே நின்றாள் சங்கமித்ரை. உபகுப்தர் விஷயம் தெரியாதவரா? எதிரிலிருப்பவர்களின் நிலைமை அறியாமற் பேசக்கூடியவரா? இல்லை. அன்று விதிவசமோ அல்லது ஈசுவராக்ஞையோ? அவர் துறவறத்தைப்பற்றிப் பேசத்தொடங்கினர். சில நிமிஷங்கள்தான் பேசியிருப்பார். ஆனால் அவைகள் தந்த பலன் "பகவான் கௌதமபுத்தர் ராஜ போகத்தையே வெறுத்து உதறிவிட்டார்" என்ற தொடர் மீண்டும் மீண்டும் அவள் மனத்துள் எழுந்துகொண்டே இருந்தது.

விடியற்காலை, வெள்ளி முளைக்கவில்லை. வாத்யங்கள் முழங்க மங்கல நீராட்ட எழுந்தனர் பெண்கள். மஞ்சத்திலே அவளைக் காணோம். ஆட்கள் பறந்தனர். அங்கே தோட்டத்தில் போதிவிருக்ஷத்தின் அடியில் அவன் காலடியில் வீழ்ந்துகிடந்தாள் அவள். அவன் நீர்மல்கும் கண்களுடன் "மித்ரே! எழுந்திரு! உலகத்தில் ஒரு சிறந்த செயலைச் செய்து முடிக்கவேண்டுமானால் அதற்குத் தகுந்த விலைகொடுத்துத்தானாகவேண்டும்" என்றான்.

ஆம் உலகத்திலே உயர்ந்தபொருள் தாங்கள்தான். இந்த சேவையின் பொருட்டுத் தங்களையே விலையாகக் கொடுத்துவிடுகிறேன். என் அன்பே! கடைசிமுறையாக அடியாள் தங்கள் பாத கமலங்களைச் சிரமேற்சூடி ததாகதருடைய பணியைச் செய்ய துணிந்துவிட்டாள். தாங்கள் மனப்பூர்வமாக என் செயல்கள் வெற்றிபெறவேண்டுமென்று ஆசீர்வதிக்கவேண்டும்' என்று சொல்லுகையில் அவள் குரல் கம்மிப்போயிற்று. "மித்திரே! பகவான் ததாகதருக்கு ஜயமுண்டாகட்டும்" என்று சொல்லியவனாய் இரு கைகளாலும் அவளை வாரித் தழுவிக்கொண்டான் அவன்.

திடீரென்று அரண்மனை முழுவதும் அமைதி நிலவிற்று. இல்லறம் புகவேண்டிய அந்த சுபவேளையிலே, உபகுப்தர் முன்பு துறவறம் பூண்டாள் அவள்; இராமனுக்குமுடிசூடக்குறித்த நாளும் கோளும்போலவே ஆகிவிட்டதே என்றுகதறியவர் பலர். இந்த சம்பவங்களெல்லாம் ஆசார்யரது மனக்கண்களின் முன்பு தோன்ற இன்பமோ துன்பமோ என்று சொல்லமுடியாத ஒரு நிலையில் அவர் மனம் துடிதுடித்தது. கப்பல் புறப்படுவதற்கு அறிகுறியாய் மணிகள் ஒலிக்கச் சங்கும் முழங்கிற்று. இரு கரங்களையும் தூக்கி "நமோ புத்தாய" என்று உரத்தகுரலில் கூவினர் அவர். அவைகளின் எதிரொலியேபோல் அதே சொற்களின் ஒலி வான வெளி முழுவதும் நிறைந்தது.

கரங்குவித்தவர்களாய் மகேந்திரனும் மித்திரையும் நின்றிருந்தனர். "புத்தம் சரணம் கச்சாமி, ஸங்கம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி" என்ற சொற்கள் மெதுவான குரலில் அவர்கள் வாயினின்றும் எழுந்தன. படகு அன்னம்போல ஆடி அசைந்து சாவகத்தை நோக்கிப் புறப்பட்டது. வைத்தகண் வாங்காமல் அது செல்லும் திசையையே பார்த்து நின்றான் அசோகன். அவன் கண்களில் கண்ணீர் துளித்து நின்றது. அது ஆனந்த பாஷ்பமா? அவர்கள் பெற்ற பேறு நாம் பெறவில்லையே என்ற ஏக்கமா?

திருக்குறள் ஸாரம்

வரகவி
திரு-அ.சுப்ரமண்ய பாரதி

ஒழிபியல்

அரசியலிலும் அங்கவியலிலும் அடங்கா தொழிந்தவைகளை விளக்குவதிது. இது குடிமை - என்பதைத் தலைமையாகக் கொண்டு பதின்மூன்றதிகாரத்தானமைந்தது. குடிகள் கௌரவமான குணங்களை யடைந்து நல்குரவால் இருந்து இன்னலெய்தாமல் உழவு தொழிலால் மேம்படும் திறத்தைக் கூறியவழியே அரசனுக்குரிய கடமையாகிய **குடியோம்பலை** வற்புறுத்துகிறதிவ் வியல்.

இதில் விளக்கப்படும் பலவகைக் குணங்களுள் **மானம்**, **பெருமை**, **சான்றாண்மை** என்பன தலைசிறந்தவை. சான்றாண்மையாவது பல குணங்களாலும் நிறைந்து அவற்றை யாளுந்தன்மை - மனிதனுடைய திறத்தை விளக்குவது இவ்வதிகாரமேயாகும். இதனைத் தன்னிடங்கொண்டுள்ள ஒழிபியல் சிறப்பியலாகவே கொள்ளத்தக்கதாம்.

காமத்துப் பால்

காமம் இங்கே **இன்பம்** என்னும் பொருளில் அமைந்தது; பொருளைத் துணையாகக் கொண்டது; இம்மையே பயப்பது; ஒருகாலத்தி லொருபொருளால் ஐம்புலனும் நுகர்தற்குரிய சிறப்பினைக் கொண்டது; "காதலிருவர் கருத்தொருமித்தாதரவு பட்டதே இன்பம்" என ஔவையார் கூறியபடி அமைவது; இல்லறம் நடத்தற்குரிய அந்யோந்ய தாம்பத்யத்தை விளங்கவைப்பது. புருஷார்த்தம் நான்கனுள் ஒன்று. ஆதலின் இது புருஷர்களால் வேண்டப்படுவது - இன்பம் பலவகைப்படும். அவைகளில் இவ்வின்பமே சிறந்தது.

சீரத்துறந்த துறவியாகிய மாணிக்கவாசகர் இதனைத் **திருக்கோவையார்** எனும் நூலில் விளக்கினர். சடகோபர் **திருவிருத்தத்தில்** விளக்கினர். புலவர் பலர் இதனை விளக்கிய நூல் பல. அவை 'கோவை' என்னும் பெயரில் உலாவுகின்றன. அவை யனைத்தும் நூற்றுக் கணக்கான - கலித்துறை என்னும் செய்யுளில் பலவகையான துறைகளில் இதனை விரிவாக விளக்கியுள்ளன. இதனைத் திருக்குறள் - **களவியல்**, **கற்பியல்** - என்னும் இரண்டே இயல்களில் இருநூற்றைம்பது குறட்பாக்களில் மிக அருமையாக விளக்கியிருக்கிறது. எல்லாம் போற்றத்தக்க நிலைமையில் படிக்கப் படிக்கச் சுவைதரும் அழகில் அமைந்திலகுகின்றன. களவென்பது புணர்ச்சி, கற்பு என்பது பிரிவு ஏனையிருத்தல் இரங்கல் ஊடல்களைப் பிரிவின்கண் அடக்கிய திந்நூல்.

காம இன்பம் அநுபவித்தவர்க்கன்றி ஏனையர் உணர்ச்சிக்கெட்டாதது. இத்தகையதென்று இயம்பவொண்ணாதது. அதுபோல் இங்கே இவ்விரு இயல்களிலும் விளக்கப்பட்டுள்ள செயல்களின் சுவை அவரவர் கருத்தூன்ற ஓதியுணர்ந்தாலல்லது பிறர் விளக்க எளிதில் விளங்குவதல்லவென்பது திண்ணம்.

இப் பகுதி, **தலைமகன்**, **தலைமகள்**, **பாங்கி**, **பாங்கன்** - என்னும் நாடக பாத்திரங்களையும் பொழிலைக் காட்சிக்குரிய நாடக சாலையாகவும் கொண்ட சிந்

கார ரஸம் பிரதானமான நாடகம் எனப் போற்றலாம். இந்த முறையிலேயே **வள்ளிதிருமணம்**-விளக்கப்பட்டுள்ளது கச்சியப்பர் இயற்றிய காந்த புராணத்தில்.

மீண்டும்மீண்டும் பிறப்பெய்தக் காரணமாமின்பத்தை - நீதிநூலில் விளக்கியது பொருந்துமா !—எனின்-பொருந்தும். அறிஞர் பயனிலபாராட்டாரன்றோ ?

திருக்குறள் முழுவதையும் தெளிவாய் ஓதியுணர்பவர், மனிதன் இல்வாழ்க்கையில் அமர்ந்து நல்ல வழியில் பொருளீட்டி அறம்புரிந்து முடிவில் துறவற நெறியால் வீடெய்தலாம் - என்பது இந்நூல் விளக்கும் கருத்தென நன்குணர்வர். இதனைப் பரிமேலழகர் துறவற இயலின் முடிவாக அமைந்துள்ள குறளின்கீழே—

> நன்றாய் ஞானங்கடந்துபோய் நல்லிந்திரிய மெல்லாமீர்த்
> தொன்றாய்க் கிடந்தவரும் பெரும்பாழ் உலப்பிலதனை யுணர்ந்துணர்ந்து
> சென்றாங் கின்பதுன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால்
> அன்றே யப்போதே வீடதுவே வீடாமே.

என்ற **நம்மாழ்வார்** பாசுரத்தை மேற்கோளாகக் காட்டி விளக்கியிருக்கிறார்.

இந்நூலில் ஒரு பாவில் ஓர் இயலில் ஒருவரைப்பற்றிக் கூறியிருக்கும் விஷயம் அவரையே குறித்ததென்பதில்லை.. எல்லோர்க்குப் பயன்படுவதாயிருப்பது கவனிக்கத்தக்கதாம்.

நாடு நல்ல அரசனால் ஆளப்படவேண்டும். அதில் இல்வாழ்வான் சான்றாண்மையுடனிருந்து இன்பமநுபவித்துப்பின் துறந்து துறக்க மடையவேண்டும் என்ற போதனையும் இந்நூலில் விளங்குவதாகும்.

இந்நூலில் ஒவ்வொரு அதிகாரமும் அதனதன் கருத்தை விளக்கக்கூடிய நாயகமணி போன்ற ஒவ்வொரு குறளையுடையதாயிலகுவதையும் ஒவ்வொரு அதிகாரத்தின் பொருளும் தனக்கடுத்ததான அதிகாரத்துடன் தக்க காரணத்தோடு பொருந்த அமைந்து அதனதன் ஸாரத்தை விளக்குவதாய் விளங்குவதையும் காணலாம்.

இந்நூல் கூறியது கூறல், மற்றொன்று விரித்தல், மிகைபடக்கூறல், வழூஉச்சொற் புணர்த்தல், மயங்கவைத்தல் - முதலிய குற்றங்களில்லாமல் - நடுநிலைமையுடைய அறிஞர் பலர்க்கும் ஒப்பமுடிந்த உண்மையை விளக்கும் உந்நத நூல்.

அழமுடைத்தாதல் - என்னும் அழகுமிருந்து இந்த நூலைத் தவிர வேறெந்த நூல்களிலும் இவ்வளவு அழகாய் அமைந்திலது இவ்வழகு - என வியக்கும்படி **முறையின் வைப்பு** என்னும் அழகு சிறந்து புலவர் உள்ளத்தைக் கொள்ளும் நூல்களில் முதன்மையாய் இலகுவதிந் நூல் - வீடு பெறுவதே இந்நூலின் முடிந்த நோக்கம், ஆதலினால் - இதன் **கண்** விழுமியத் பயத்தல் - என்னும் அழகுமுண்டெனவாம்.

இங்ஙனம் அழகமைந்து விளங்குமிந்நூல் - உவமை முதலிய பல அணிகளையும் அணிகலனாகக் கொண்டுள்ளது காணலாம்.

சூது, மருந்து என்பவைகளை விளக்கியது மற்றொன்று விரித்தல் என்னும் குற்றமாகாதோவெனின், ஆகாதென்பது இந்நூலை நோக்கத்தைத் தொகுத்துப் பார்த்து அறிவார்க்கு நன்கு விளங்குவதாம்.

நீதியை உடன்பாட்டு முகத்தானும் மறைமுகத்தானும் விளக்குவதன்றி ஒரு நீதிக்கு மற்றொரு நீதியை உவமையாக அமைத்து இரண்டையும் வற்புறுத்துமழகு இதில் பாராட்டத்தக்கதாம்.

இம்மை, மறுமை, வீடு என்னும் இம் மூன்றும் இந் நூலுக்கு உடன்பாடு. இல்லறத்தின் பயன் ஸ்வர்க்கத்துடன் நிற்கும். துறவறம் வீட்டின்பம் பயக்கும் - என்னும் கருத்தினைமுடிவாகக் கொண்டதிந்நூல்.

இத்தகைய சிறப்பினை மேற்கொண்ட இந் நூலை ஓதி யுணர்ந்து, உணர்ந்த வழியில் நடந்து, பயன் பெற்று வரும் தமிழ் மக்களின் தவப்பேறே ஏனையர் தவத்தினும் சிறந்ததாம்.

சுபம்.

29

அபலைமானம் காத்து ஆடை அளித்த கண்ணுபோற்றி
கபடனுன சகுனிகர்வம் சிதைத்த கண்ணுபோற்றி
நண்பனும் சுதாமனுக்கு அன்பளித்தாய்போற்றி
அன்புடன் அக்ரூரருக்கு அருள்புரிந்தாய்போற்றி.

என்கிற பாடலை கிருபாவதி தன்னினைவு தெரியாமலேயே பாடுவதைக் கேட்ட கண்ணம்மாளுக்குத் தாங்கமுடியாத துக்கம் தொண்டையைப் பிறிக்கொண்டு வந்து அழுதுவிட்டாள். "என்ன மதுரகீதம். நினைவு தெரியாத ஜுரத்தில்கூட சிலரைப்போல் கன்னுபின்னு என்று வாய்பிதற்றிப் பிறரைக் கடுமிடி செய்யாது, அம்ருத தாரையைப் பொழிவதேபோல் பாடுகிறுளே! என்ன சுபாவம்... இத்தகைய பொறுமைசாலியை அந்த மகாபாவி இப்படிச் செய்யலாமா... உங்கள் கடிதம் போய்ச் சேர்ந்திருக்குமா! இவளைப் பார்த்தாலே பயமாகவிருக்கிறதே. என்னசெய்வது?" என்று தன் கணவனிடம் விசனத்துடன் கூறினுள்.

நாகராஜனுக்கோ ஒரு நிமிடம் போவது ஒரு யுகமாக இருக்கிறது. கிருபாவதியின் நிலைமையில் மிகவும் அதிருப்தி உண்டாகிறதேயன்றி நம்பிக்கையே அற்றுவிட்டது. "இன்றுதான் என் கடிதம் சேர்ந்திருக்கும்; உடனே வரும்படி ஒரு தந்தியும் கொடுத்துவிடட்டுமா?' என்றுன்.

இந்த வார்த்தை காதில் கேட்ட கிருபாவதி அரைகுறை நினைவோடு, "கண்ணம்மா! தந்தியடிக்கப்போகிருரா!...ஏன்...என்னைப் பார்த்தால் பயமாயிருக்கிறதா!...ஐயையோ! அப்படியாயின் தந்தியடிக்கவேண்டாம்...உங்கள் நண்பர் பயந்து நடுங்கி இடிந்துவிடுவார். வேண்டாம்... அடாடா...ப்ரேமாமணி இப்போதே தாயில்லாக் குழந்தையாய்விட்டதா! அதன் தலையெழுத்து இப்படியா இருந்தது?" என்று கூறிவிட்டு கடகடவென்று பெரிதாகச்சிரித்தாள்.

இச் சிரிப்பின் பயங்கர எதிரொலி அவ் வீடு பூராவும் சுற்றிக்கொண்டது. அதைப் பார்த்த கண்ணம்மாளுக்கும் நாகராஜனுக்கும் உயிர் துடித்தது. "இந்த ப்ரமாதமான உடம்பு ஏதோ விபரீதத்திற்குத்தான் வந்திருக்கிறது. இது சாமானியமாக விட்டுவிடும் என்று எனக்குத் தோன்றவில்லை. கடிதத்தைப் பார்த்தவுடனே அந்த முட்டாள் வந்து சேரக்கூடாதா! பொழுதும் சாய்ந்துவிட்டதே" என்று வருத்தப்பட்டவாறு வாசலுக்கும் உள்ளுக்கும் உலாவுகிறுன்.

அங்கு பார்வதியம்மாளுக்கோ, தன்னை அலக்ஷியம் செய்துவிட்டுத் தன் கணவன் போன வயித்தெரிச்சலுடன் தானே மனக்கெட்டு அழைத்து வந்த பெண்ணும் தன்னை அலக்ஷ்யம் செய்துவிட்டுப் போனது பின்னும் பதின் மடங்காகப் பற்றிக்கொண்டது. அவளுக்குள்ள ஆத்திரத்தில் பிடி சாபம் கொடுக்கும் சக்தியிருக்குமாயின் சாம்பலாகச் சபித்து எல்லோரையும் பஸ்மீகரம் செய்திருப்பாள். ஆனல் அந்தச் சக்தி இல்லையே! தான் ஒரு டாக்ஸி கார் வைத்துக்கொண்டு போகலாமா என்றுகூடத் தோன்றியது. ஆனல் இராக்காலத்தில் தகுந்த துணை யாரைத் தேடுவது. அதுவும் பயனற்றது. இரவு முற்றும் மகத்தான ஆத்திரமும் யோசனையும் கொண்டு இமைகொட்டாமல் புரண்டாள். எப்போது பொழுது விடியும் என்று பார்த்திருந்த சமயம் இவர்களுடைய கார் வரும் ஓசை கேட்டதும் பார்வதியம்மாள் பின்னும் ஆத்திரமும் கர்வமும் அடைந்து உள்ளேவிட்டு எழுந்து வராது திமிருடன் படுத்திருந்தாள். ஆனல் அடுத்த நிமிஷமே குழந்தையின் அழகுரல் கேட்டு வியப்பும் திகைப்பும் அடைந்தாள். மருமகளைத்தான் அழைத்து வந்துவிட்டார் என்று தோன்றியதால் அந்த சிறுக்கி கடிதமெழுதிய அபராதத்திற்கு அவள் முகத்தில் விழிக்காது தண்டனை செய்யவேண்டும் என்கிற ஆத்திரத்துடன் "சித்ராங்கித்தனமாக மாமனருக்குக் கடிதம் எழுதி ரகஸியமாக அந்த அசட்டு மனிதனை வரவழைத்துவிட்டால் மட்டும் காரியத்தை சாதித்துக்கொள்ள முடியுமா? **மலையில் விளைந்தாலும் தந்தாணியில்தான் மசியவேண்டும்** என்பதை உணரவில்லை போலும்" என்று

தன்போக்காக கிருபாவதியின் காதில் படவேண்டும் என்கிற நோக்கத்துடன் உரக்கக்கூறினாள்.

பெரியதாக அழும் குழந்தையை எடுத்துக்கொண்டு விச்வநாதன் உள்ளே வரும்போது இந்த பத்திரகாளியின் வார்த்தை காதில் விழுந்து மிக்க கோபமும் விசனமும் அடைந்து பல்லைக்கடித்துக்கொண்டு, 'போதும். பிசாசு!...உன் மனப் படியேதான் நடந்துவிட்டது. இனி சந்தோஷம்தானே! உன் விஷப்பல்லுக்குத் தவறி கிருபாவதி பிழைப்பாளோ! அல்லது அவளை மகமாயித்தாயிதான் அழைத்துக்கொண்டுவிடுவாளோ! யார் கண்டது?...

என்று முடிப்பதற்குள் பார்வதியம்மாள் "என்ன என்ன!...மகமாயியா!"... என்று ஒரு அலறு அலறினாள். பார்வதியம்மாள் பத்திரகாளி ஸ்வரூபத்திலிருந்த போதிலும், மகமாயி, காலரா, ப்ளேக், க்ஷயம், டைபாயிடு முதலியவைகளைக் காதால் கேட்பதற்கே மிக்க பயமும் நடுக்கலும் கொண்டவள். அத்தகைய விஷயங்களைப் பேசவும் மாட்டாள். அந்த இடங்களுக்குச் செத்தாலும் அடி எடுத்துவைக்கமாட்டாள். அதற்குமட்டும் அத்தகைய பயந்த ஸ்வபாவத்தை யுடையவளாதலால் மகமாயி, என்கிற பெயரைக் கேட்டவுடனே அலறிப்போய் சற்று பின்னால் நகர்ந்து நின்றாள்.

விச்வநாதனுக்கோ இந்த மூதேவியின் முகத்தைப் பார்க்கவும் பிடிக்க வில்லை. ஆத்திரத்தின் எல்லை கடந்துவிடும்போல் துடிக்கிறார். "இந்தா குழந்தை. சரியான பால்காரி வைத்துக் காப்பாற்று. கிருபாவதி இனி பிழைத்தகாலத் திற்குப் பார்க்கலாம். மகமாயி விளையாடுகிறாளாம், ஆதலால் குழந்தையைப் பார்த்துக்கொள்ள யாரும் இல்லாததால் கொண்டுவந்துவிட்டேன். நீ என்று அப சகுனம்போல் அந்த மகாலக்ஷ்மியை, நகைகளைப் பிடுங்கிக்கொண்டு குழந் தையையும் வாங்கிக்கொண்டு குண்டு தைரியத்துடன், கதறவிட்டு வந்தாயோ அப்போதே என் மனத்தில் திக்கென்று உறுத்தியது. உன் அபசகுன வாயின் அவச்சொல் பலித்து குழந்தையும் தாயில்லாக் குழந்தையாகத்தான் போய் விடுமோ என்றும் பயமாகவிருக்கிறது" என்று கண்ணீர் பெருக கூறுவதைக் கேட்ட பார்வதியம்மாளின் தேகம் மகமாயியின் பயத்தால் சற்று ஆடியது.

மீண்டும் பலமான அதிர்ச்சியுடன், "என்ன!...கிருபாவதிக்கு மகமாயியா விளையாடுகிறாள். ஐயையோ! கேட்கும்போதே பயமாயிருக்கிறதே. என் கண் மணி ப்ரேமாவுக்கு வராதிருக்கவேண்டுமே! மகமாயியின் விளையாட்டில்தான் ஆதியில் என் தமக்கையை இழந்தேன்: அதுமுதல் அந்தப் பெயரைக் கேட்கும் போதே நடுங்குகிறதே!"...என்று தன்னையும் மீறி வாய்விட்டுச் சொன்ன தைக் கேட்கும்போது விச்வநாதனுக்கு ஆத்திரம் பீறிக்கொண்டு வந்ததால் அவரையும் மீறி, "எல்லாம் சோதனையின் கொடுமைதான். அந்த மகமாயி இந்த பத்திரகாளிக்கு வந்து...என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே போய்விட் டார். ஆனால் பார்வதியம்மாளின் அப்போதிய அதிர்ச்சியில் அவர் சொல்லியது காதில் படவில்லையாதலால் ரகளை எதுவும் நடக்கவில்லை. குழந்தையின் அழுகை யைச் சமாதானம் செய்வதில் திரும்பிவிட்டாள். விச்வநாதனுக்கு உண்டான மனக்கலக்கத்திற்கு அளவே இல்லை. நல்லபடி தன் மருமகளுக்கு குணமாகிய சந்தோஷச் செய்தியை என்று காதில் கேட்போம் என்கிற பெரும் ஏக்கம் பிடித்து, மகமாயித்தாயை மனதாரத் தோத்திரம் செய்து வணங்கித் தொழுது வேண்டி மகமாயி ஆலயங்களில் பூஜைகள் செய்யவும் ஏற்பாடு செய்தார்.

அன்று செல்ல மறுதினம் முரளியிடமிருந்து தகப்பனாருக்குக் கடிதம் வந்தது. "குழந்தையைக் கொண்டுவிட்டாயிற்று! கிருபாவதிக்கு உடம்பு தேவலையா! அவளுக்கும் கடிதமெழுதியிருக்கிறேன். விவரமான பதிலை எழுதவும் நான் உடனே வந்துவிடலாம் என்று எண்ணியதற்கு மாறாக இங்கு ஒரு மாதம் தங்கவேண்டிவரும்போல் அத்தனை வேலை இருக்கிறது. அடிக்கடி கடிதமெழுத வேண்டும்" என்று எழுதியிருந்தான்.

இதைப் படித்த விச்வநாதனுக்குப் பின்னும் மனது குழம்பியது. ஊரை விட்டு ஊர் போயிருக்கும் சமயம் இந்த விஷயங்களைக் கேட்டால் மனது தவிக்கப் போகிறானே...என்கிற கவலையால் குழம்பினார். எனினும் இத்தகைய விஷயங்களை மறைத்துவைக்க முடியுமா! மறைப்பதுதான் நன்மையா? பிறகு நடந்துள்ள விஷயங்களைக் கடிதமெழுதிப் போட்டார்.

நாகராஜனும் கண்ணம்மாளும் கிருபாவதியிடமே இருப்பதற்காகச் சென்ற போதிலும் கண்ணம்மாள் கர்ப்பவதியாயிருப்பதால் அவள் அருகில் இருக்கக் கூடாதென்று பெரியவர்கள் சொல்லி அவளை ஊருக்கு அனுப்ப ஏற்பாடு செய்யும்போது கண்ணம்மாளுக்கும் மகமாயி விளையாடவாரம்பித்துவிட்டதால் நாகராஜன்பாடு கதிகலங்கிவிட்டது. "கர்ப்பவதியாயிற்றே! என்ன செய்வது?" என்கிற பயம் அவனை வாட்டி வதைக்கிறது. இச் செய்தியைக் கடிதமூலமறிந்த விச்வநாதன் பின்னும் பரிதபித்தார்.

முரளிக்கோ இச் செய்திகளை அறிந்ததும் அப்படியே அக்னி குளத்தில் அவனைத் தூக்கிப்போட்டதுபோல தோன்றியது. ஏற்கெனவே மனக் கலவரத்தில் ஆபீஸில் வேலை செய்யமுடியாது தவித்தான். இச் செய்திகள் அவனை அடியோடு பைத்தியமாக்கிவிட்டன. இந்த கலவரத்தில் ஆபீஸ் வேலையில் தப்புகள் விழாதிருக்கவேண்டுமே என்கிற கவலையும்கூடப் புகுந்துகொண்டது.

வேலையின் நிர்ப்பந்தம் ஒரு நாள் லீவு கொடுக்கவும் சாத்யப்படாது போயிற்று. மிக்க ச்ரமத்துடன் இரண்டு நாட்கள் லீவில் நேரே கிருபாவதியின் ஊருக்கே ஓட்டமாக வந்தான். மகமாயி விளையாடும்போது அன்னியர்கள் யாருமே வருவதுகூடாது. அதிலும் கணவன் வெளியிலிருந்து வந்து பார்க்கவே கூடாது என்பது ஒரு பழக்கமான முறையாதலால் முரளி வருவது காரின் ஹாரன்மூலம் தெரிந்தவுடனே கிருபாவதியின் சொந்தக்காரர் அவனை உள்ளே வரவிடாது தடுத்துவிட்டார். மிகவும் மும்முரமாக மகமாயி விளையாடுவதால் கிருபாவதிக்கு ஒன்றுமே தெரியாது. கணவன் வந்ததும் தெரியாது. தனது மாமனின் மனைவி திடீரென்று மரணமடைந்த பரிபவமும் தெரியாது. முரளி மனமுடைந்து தவிக்கையில் கிருபாவதி தன்போக்காக **"தாரணியின்"** என்கிற பாட்டைப்பாடும் த்வனியைக் கேட்டு உள்ளம் உருகினான். நாட்டுப்புறத்து மூட ஜனங்களின் கட்டுப்பாட்டுத்தளையை அறுத்தெறிந்துவிட்டு நேரே உள்ளே போகலாமா என்றும் நினைத்தான். அடுத்த நிமிடமே மகமாயினிடத்தில் பயபக்தியாய் இருப்பதைவிட்டு முரட்டுத்தனமாக நடந்தால் விபரீதமே உண்டாகி ஏதேனும் ஆபத்தாக முடிந்துவிட்டால் என்ன செய்வது என்கிற பயத்தினால் சற்று கலங்கினான். உடைந்த மனத்துடன் தன் குழந்தையையாவது பார்த்துவிட்டுப் போகலாமென்று வீட்டிற்கு வந்தான்.

183081

குழந்தை தாயைப்பிரிந்து சில தினங்களாகிவிட்டபடியால் அழுகை சற்று ஓய்ந்து சுமாரான நிலைமையில் இருந்தது. தன் தாயார் குழந்தையை நன்றாகப் பார்த்துக்கொள்வதைக் கண்டு சந்தோஷப்பட்டபோதிலும் அவள் குழந்தையை முதலில் பிரித்ததனால்தான் இந்தகதி வந்தது என்கிற கோபமும் கூடவே தோன்றி வதைத்தது. அதைப் பார்க்கும்போதெல்லாம் அது தாயில்லாத பரதேசிக் குழந்தையைப்போல் ஒரு பரிதாபம் தோன்றி சகிக்கமுடியாத சங்கடத்தை உண்டாக்கியது. குழந்தையுடன் சற்று கொஞ்சிக் குலாவினான். அங்கும் இருக்கை கொள்ளவில்லை. மீண்டும் காம்புக்கே போய்விட்டான். முரளியினுடைய மனவேதனையின் குழப்பத்தில் கட்டாயம் தனக்கு வேலையில் ஏதாவதொரு குற்றம் விழுந்தே தீருமோ என்கிற பயமும் சேர்ந்து வருத்தவாரம்பித்தது.

30

"மாமா! உண்மையாகவா இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது! காலெண்டரில் காண்பது உண்மையானதா!...மாமி எங்கே?...ப்ரேமா எங்கே...ஆம்...மறந்துவிட்டேனே...ப்ரேமாவைத்தான் என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்களே!...ஐயோ!...என் ப்ரேமாவைப் பிரிந்து

இரண்டுமாதகாலமா ஆகிறது!...கண்ணம்மா எங்கே?"... என்று கிருபாவதி ஒவ்வொன்ருகக் கேள்விகள் கேட்க வாரம்பித்தாள்.

சதாசிவனுக்குப் பதில் சொல்வதற்கே முடியாது துக்கம் தொண்டையை அடைக்கிறது. தன் மனைவியின் மறைவை இப்போது எப்படிச் சொல்வது? கண்ணம்மாளுக்கும் மகமாயி விளையாடி மிகவும் ச்ரமப்பட்டிருப்பதைக் கூட இப்போது சொல்ல ப்ரியப்படாது எல்லோரும் ஊருக்குப்போயிருப்பதாக ஒரு பொய்யைக் கூறிச் சமாதானம் செய்தார்.

நினைவுதப்பிக் கிடக்கும்போது உலகை யறியாதிருந்தது சகஜமாக விருந் தது. இப்போது நன்ருக தன் சுயபுத்தியை உணர்ந்த பிறகு அவளைச் சமாதானம் செய்வது அவள் மாமனுக்குப் பெருத்த சங்கடமாயும் கஷ்டமாயும் இருந்தது. நாட்கள் உருண்டோடுவதையும், ஆற்றுவெள்ளம் பொங்குவதையும் தடுக்க முடியுமா? கிருபாவதிக்கு நல்ல தெளிவும் தெம்பும் உண்டாகி எழுந்திருப் பதற்குள் சரியாக மூன்றுமாத காலம் ஓடி மறைந்துவிட்டது. தோல் உரித்த கோழியைப்போல் கிருபாவதி காணப்படுவதைக் கண்டு சதாசிவமே துயரக் கடலில் மூழ்கினர். அவளுக்குத் தன் கணவனையும் குழந்தையையும் பார்க்க வேண்டுமென்கிற ஆவல் தடுக்கமுடியாது வருத்துவதால் அவர்களை வரும்படிக் கடிதமெழுதச் சொல்லித் தொந்தரவு செய்தாள்.

ஆறுமாத காலம் மகமாயி வயிற்றுக்குள்ளேயே இருப்பாள் என்கிற பயத்தினல் பார்வதியம்மாள் முரளியையும் அனுப்பவில்லை. குழந்தையையும் அனுப்பாது தானும் போகப் பயந்தாள். ஊரார் நிந்திக்கப்போகிருர்களே என்கிற விஷயத்தைப்பற்றி அந்த புண்யவதிக்குக் கவலையென்பதே இல்லை.

முரளிக்கு மட்டும் அவன் தகப்பனர் மூலம் கிருபாவதியின் தேக நிலைமை தெரிந்துகொண்டிருந்தது. ஒரு மாதம் வேலை என்று சென்றவிடத்தில் மூன்று மாதகாலம் தங்கும்படியாகிவிட்டதால் அவனுக்கு ஆத்திரமும் கோபமும் விபரீத மாக மூண்டன. இந்த சனியன் பிடித்த வேலையை விட்டுவிட்டு வரலாமா என்றும் எண்ணினன். பிறகு சற்று சமாளித்துக்கொண்டு பொறுமையை வகித்தான்.

மகமாயி இறங்கி ஜலமும் விட்டாயிற்று என்பதைக் கேட்டதும் சற்று மனச் சாந்தியும் நிம்மதியும் உண்டாகியது. எப்போது அவளைப் பார்க்கப் போகிறேம் என்கிற தாகத்துடன் பறந்தான். மூன்று மாதம் கழிந்தபிறகுதான் பார்க்கலாம் என்று முன்பே சொல்லியிருந்ததால் மெல்ல பல்லைக் கடித்துக் கொண்டு நாளைக்கடத்தினன். பிறகு தான் நேரே அங்கு வருவதாக சதாசிவ னுக்குக் கடிதம் எழுதினன்.

இக் கடிதம் வந்திருப்பதைக்கேட்டு க்ருபாவதியின் இதயம் ஆனந்த மய மாகப் பொங்கியது. தன் அன்பனையும் குழந்தையையும் பார்க்கப் போகும் சந் தோஷமே அவளுக்குத் தன்னையறியாத பலத்தையும் கொடுத்தது. அதுவரையில் படுக்கையிலேயே கிடந்தவள் அந்த உத்ஸாக வெறியில் எழுந்து அவ்விடத்தை சுத்தமாகச் செய்யவும் தன்னை அலங்கரித்துக்கொள்ளவும் ஆரம்பித்தாள். மூன்று மாதம் கழித்து அன்று கண்ணுடியில் தன் உருவத்தை ஒருமுறை மகிழ்ச்சி மயமான இதயத்துடன் நோக்கினள்.

அந்தோ...பரிதாபம்!...பார்த்த மறுக்ஷணமே "ஹா!...கண்ணுடியில் தெரி யும் உருவம் யாருடையது?...ஐயையோ...இதென்ன தோற்றம்...கிருபாவதி யின் உருவமா!...கிருபாவதியா!" என்று ஒரு அலறல் அலறியவாறு மூர்ச்சை யாகி விழுந்தவள் எழுந்திருக்க வெகு நேரமாயிற்று.

தன் கணவனைக் காணப்போகும் ஆனந்தம் எத்தனை உச்சத்தில் சற்று முன்பு இருந்ததோ அதற்கு நேர்மாருன திகிலும் பயங்கரமும் தடுமாற்றமும் ஒன்றுகூடி அவளைச் சித்திரவதை செய்து வாட்டுகிறது. "ஏன் இந்த கண்டத்தில் பிழைத்தோம்...மகமாயி என்னைத் திருவடியில் சேர்த்துக்கொண்டிருக்கத் கூடாதா!...என்னை இப்படியா சோதனை செய்யவேண்டும்? இப்படியா உருக்

குலைத்துக் கலக்கவேண்டும். என்ன செய்வேன்?...அழகுக்கே அடிமையான என் கணவனின் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? இந்த அலகை ஸ்வரூபத்தைக்கொண்டு இனி நான் எப்படி உயிர் வாழ்வேன்?'' என்று பலவிதமாக எண்ணிக் கதறுகிருள். நெருப்பில் பட்ட புழுகெனத் துடிக்கிருள். சதாசிவமோ மருமகப்பிள்ளை வருவதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்ய ஓடியாடுகிருராதலால் அவளை கவனிக்க முடியாதுபோயிற்று.

கிருபாவதி மீண்டும் சற்று தைரியம் செய்துகொண்டு கண்ணுடி யருகில் வந்துநின்றுள். தலையில் ஒருமயிர்கூட இல்லாது முற்றும் வழுக்கைபோல் உதிர்ந்து விகாரமாகவிருப்பதையும், முகம்முற்றும் மகமாயியின் ப்ரஸாதவடுக்கள் நிறைந்து கறுத்திருப்பதையும் தன்னுலேயே கண்டு சகிக்கமுடியாது கண்ணுடிக்கு முன்பே வீறிட்டுக் கத்தினுள்.

"ஐயோ! மகமாயி!...நீ என்னிடம் கருணை கூர்ந்து என்னை விழுங்கி ஆனந்தப்படாது இப்படி ஏன் பரிபவப்படுத்தவேண்டும்?...என்னுயிர்ப் பிச்சையை நீ கொடுத்ததானது என் வாழ்க்கையின் பாதையையே முள்வேலி போட்டு அடைத்ததுபோலாகிவிட்டதே...அழகு...அழகு.. அழகுக்கே அடிமையாகியுள்ள என் கணவரும், என் மாமியாரும் என்னைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டார்களே! என் கதியை எண்ண பயம் நடுக்குகிறதே...பிழைத்தும் பயனற்றுவிட்டதே...என்ன செய்வேன்?...

ஆம்...நிச்சயமாய் என் கணவர் என்னைப் பார்க்கவும் வெறுத்து ஓடுவார்...நான் இங்கிருந்தால் என்னை இக்கதியில் பார்த்துவிட்டு வீட்டிற்கே வர வேண்டாமென்று கட்டாயம் கூறினுலும் கூறலாம்...ஆகையால் நானே இப்போதே அவர்கள் வீட்டிற்குப் போய்விடுகிறேன். வீடேறி வந்த பிறகு என்னை என்ன செய்கிருர்களோ பார்க்கவேண்டும்..."மாமா!...மாமா!...நான் இந்த க்ஷணமே என் வீட்டிற்குப் போகவேண்டும் அவர் நாளை இங்கு வருவதற்குள் நாம் அங்குபோனுல்தான் என் எதிர்காலத்திற்கு ஏதாவது விமோசனம் கிடைக்குமா என்று தெரியும்; தடங்கல் சொல்லாது கிளம்புங்கள் மாமா!...கிளம்புங்கள்...உம்...இனி 5 நிமிஷங்கூட தாமதிக்கமாட்டேன்.'' என்று ஒரே ஆவேசமும் பிடிவாதமும் கொண்டு கிளம்பிவிட்டார்.

சதாசிவம் எத்தனை சமாதானம் செய்தும் பலிக்கவில்லை. காட்டுவெள்ளம் பொங்குவதுபோல் கிருபாவதியின் எதிர்கால வாழ்க்கைப் புயலில் மனம் லயித்துப் போராடிப் பொங்கியோடுகிறது. அவளை யறியாது திடும்திடும்என்று பயம் தூக்கி வாரிப்போடுகிறது "மாமா!.. நான் ஏன் பிழைத்தேன்...மகமாயி என்மீது கருணை காட்டி என்னைத் தன்னடி சேர்த்துக்கொண்டிருக்கக் கூடாதா!...என்னுடைய எதிர்காலத்தின் பயங்கரம் என்னை மிகவும் வாட்டி வருத்துகிறதே. என்ன செய்வேன்...என்னை அவர் முகமெடுத்துப் பார்ப்பாரா...அழகுக்கே அடிமையான அவர் கண்கள் இந்த பிம்பத்தை நோக்குமா! ஐயோ! நினைக்கும்போதே பயமாயிருக்கிறதே!'' என்று ப்ரலாபிக்கின்றுள். என்ன சொல்லியும் கேளாததால் சதாசிவம் அவளை யழைத்துக்கொண்டு அந்தக்ஷணமே கிளம்பினுர். கிருபாவதியின் அப்போதிய நிலைமையில் தன் குழந்தையைக்கூட மறந்தாள் என்றுல் மிகையாகாது. "கடவுளே! என்னைக் கைவிடாதே'' என்று மனத்திற்குள் வேண்டியபடியே ப்ரயாணத்தைத் தொடங்கினுள்.

காலைநேரம் எங்கும் சிலுசிலுப்பான காற்று வெகு மனோகரமாக வீசிப் பரவசப்படுத்துகிறது. கிருபாவதியும் சதாசிவமும் வந்திறங்கினுர்கள். கிருபாவதியை அறியாமலேயே ஏதோ சித்திரவதை செய்கிறது. கால்கள் நடுங்கியவாறு உள்ளே வந்தாள். முன்கட்டுக்கருகில் நிற்கும் காவலாளி..."ஐயையோ! இதென்ன அனியாயம்! வாசலிலேயே பிச்சைவாங்கி வந்தவர்களுக்கு இத்தனை தைரியம் பிறந்துவிட்டதா! சமயல்கட்டுக்குக்கூட போய்விடுவாயா...சேச்சே...வெளியே போ...கோரஸ்வரூபம்!''...என்று கத்தினுன்.

ஐயோ! பாவம்...கிருபாவதிக்கு இச் சொற்கள் பெரிய எரிமலையே புரண்டுவந்ததுபோல் தோன்றி ஆசாபாசமும் அடங்கி உடல் முற்றும் ஒரே ஜலப்ரளயமாகிவிட்டது. அந்த வேலைக்காரன் இவள் ஊருக்குப்போன பிறகு புதிதாக வந்தவனுகையால் இவளுக்கு இன்னது பதில் பேசுவதென்றே தெரியவில்லை. சதாசிவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. வேலைக் காரனை விழுங்கிவிடுபவள்போல் முழித்துப்பார்த்தான்.

கிருபாவதி மெல்ல சமாளித்துக்கொண்டு "அப்பா! நான் காசு பிச்சைக்கு வரவில்லை. என் நாதரிடம் அன்பு பிச்சைக்குத்தான் வந்திருக்கிறேன்" என்று கண்ணீர் வழியக் கூறியவாறே தடதடவென்று உள்ளே சென்ருள். வேலைக் காரன் "உள்ளே போகாதே... அம்மா!... பெரியம்மா!... பிச்சைக்காரி யாரோ உள்ளே வருகிருள்" என்று கத்தினன்.

இக் குரலைக் கேட்டு விச்வநாதன் வெளியே வந்தார். கிருபாவதியைப் பார்த்ததும் "யாரம்மா! ஏன் உள்ளே போகிருய்?" என்று கேட்கும்போது பின்னல் வரும் சதாசிவனைப் பார்த்ததும் "ஓ! சம்மந்தி ஸ்வாமியா! வாருங்கள்... வாருங்கள். கிருபாவதி சவுக்யமா...நன்ருக நடக்கிருளா?...அது மட்டும் மக மாயி என் க்ரகலக்ஷ்மிக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தாளே! அது போதும்"... என்று பேசுகிருரேயன்றி கிருபாவதியை உண்மையில் யாரோ என்று கண்ணல் பார்க்கவே இல்லை.

சதாசிவத்திற்குக் கண்ணீர் பொங்கி வழிகிறது. பேசவே நாவெழவில்லை. இந்த வார்த்தைகளைக் கேட்ட கிருபாவதியின் இதயம் உடைந்தது. கேவிக் கேவிப் புலம்பியபடியே "மாமா! என்னைத் தெரியவில்லையா! இதோ நான் நிற்கி றேனே!" என்று கூறியவாறு அவர் கால்களில் விழுந்தாள். யாழினும் இனிய அவளுடைய மதுரகண்டத்வனியைக் கேட்டபிறகே விச்வநாதனுக்கு ஒரு பெரும் அதிர்ச்சியும் கூறத்திறமற்ற வியப்பும் உண்டாகி அப்படியே கல்லாய்ச் சமைந்துவிட்டார்..."என்ன க்ருபாவதியா!... என்னம்மணியா...என் செல்வியா... ஐயோ"...என்று ஒரு பெருமூச்சு துரத்தியபடியே கூறியவாறு அவளை முற்றி லும் ஏற இறங்கப் பார்த்தார். "அடாடா! என்தாயே! மகமாயீ! உன் கருணை இப்படியா இருந்தது... அம்மணீ... கிருபாவதீ... அழாதேம்மா! பகவானின் சோதனைதான் இது. இன்றுதானே முரளி அங்கு வரப்போவதாக எழுதியிருக் கிருன். நீயே இங்கு வந்துவிட்டாயே...வாம்மா! உள்ளே வா...ஐயோ!...என் னம்மணீ...நீயா கிருபாவதி என்று நானே ப்ரமித்துவிட்டேனே! அந்த...என்று ஆரம்பித்துத் தானே நிறுத்திவிட்டார்.

அதே சமயம் அழகுவெள்ளம் புரண்டு வருவதுபோல் ப்ரேமா கண் கொள்ளாத காக்ஷியாய்த் தவழ்ந்தவாறு தனது அத்புதமான பாஷையாகிய அத்தா... தாதா... இக்கும்... பூபூ... மாமா... என்று மழலைமொழியைஅள்ளி வீசிக் கொண்டே வருவதைக் கண்ட உடனே கிருபாவதிக்கு இருக்கும் அளவிடாத துக்கத்தின் மத்தியில் புத்திர வாத்ஸல்யம் புயல்காற்றுபோல் பீறிக்கொண்டு வந்து பித்துபிடிக்கச் செய்ததால், "என் கண்மணீ! ப்ரேமா...என் செல்வக் கிளியே...என் ராஜரத்தினமே"...என்று வயிற்றிலிருந்து பொங்கிவரும் ஆசை யுடன் கூறியவாறு குழந்தையை வாரி எடுத்துக் கட்டிமுத்தமிட்டு உச்சி முகர்ந் தாள். தாயைப் பிரிந்தநாள் முதலே அதற்கு வேற்றுமுகம் அதிகமாகி விட்டதால் பாட்டியையும் வேலைக்காரப் பெண்ணையும் தவிர வேறு யாரிடமும் போவது கிடையாது. கிருபாவதியின் அப்போதைய ஸ்வரூபத்தைக் கண்டதும் குழந்தை வீறிட்டு விலுவிலு என்று உதைத்துக்கொண்டதே யன்றி கிருபாவதி யின் முகத்தையும் பார்க்க பயந்து நடுங்கியது.

குழந்தை பெரிதாக வீறிடும் குரலைக்கேட்டு "என்னடா என் ராஜா! ஏண்டா அழுகிருய்?"...என்று கேட்டவாறே பார்வதியம்மாள் அலையக்குலைய ஓடிவந்தாள். சாபத்தினல் உருவம் மாறுவதுபோல் அடியோடு மாறியுள்ள கிருபாவதி குழந் தையை வைத்திருப்பதைக் கண்டு "அட சனியனே! யாரடீ வீட்டிற்குள்ளே

வந்து என் குழந்தையை வெகு தைரியமாகத் தூக்கியது? நகைகளை அமுக்கி விடலாம் என்று பகல் கொள்ளையடிக்க உன்னை யாரடா உள்ளேவிட்டது?... ஏண்டா குப்பா !...நீ காவல் புரிகிற லக்ஷணம்!"...என்று மேலே சொல்வதற்குள், விச்வநாதன் பார்வதியை முறைத்துப் பார்த்தவாறு "உம்...வாயை அடக்கு மகமாயி நமக்காக உயிர்ப்பிச்சை கொடுத்து உதறித் தள்ளிவிட்டுச் சென்ற உன் எருமை கிருபாவதியைத் தெரியவில்லையா... அவள் குழந்தையை அவள் எடுப்பதற்கு யாரைக் கேட்கவேண்டும்... எல்லாம் உன்னுடைய விபரீதமான கர்வத்தை ஆணவத்தை, திமிரை... மகமாயி பங்கப்படுத்திவிட்டாள்... அம்மா, கிருபாவதீ... ஏன் இப்படி விசும்பி, விசும்பிப் புலம்புகிறாய்?... எல்லாம் காலத்தின் கோலம்"... என்று கூறும்போது குரல் கம்மியது.

பார்வதியம்மாளின் காதில் இச்சொற்கள் விழுந்ததும் செம்மட்டியால் அவள் மண்டையில் அடிப்பதுபோன்ற அதிர்ச்சியும் ஏமாற்றமும் உண்டாகி, "ஹா...என்ன...கிருபாவதியா ! நிஜமாகவா...ஐயையோ...பெரியம்மை வந்தால் வயிற்றில் ஆறுமாதம் தங்கியிருப்பாள் என்று சொல்வார்களே ! என் கண்மணிக்கு வராதிருக்கவேண்டுமே!"...என்று கூறியபடியே குழந்தையை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு "இந்த அனியாயம் உண்டா ! எனக்குத் தெரியாமல் ரகஸியமாய் இவளை யார் வரச்சொன்னது. எல்லாம் நீங்கள் செய்யும் காரியந்தான். இதற்குள் ஊரைவிட்டு ஊரு வருவார்களா !...ஐயையோ...என் முரளியின் தலையில் கல்லைப் போட்டுவிட்டீர்களே!"... என்று பெரிய ஒப்பாரி வைத்தழுவதுபோல் அழுதவாறு கிருபாவதியைப் பார்க்கவும் பிடிக்காது நேரே தடதடவென்று உள்ளே போனாள்.

கிருபாவதியோ தனது இயற்கையான வணக்கத்துடன், "மாமீ மாமீ!... என்று கூறியவாறு அவள் கால்களில் விழுந்தாள். பார்வதியம்மாள் இதயத்தில் செய்யும் சங்கடத்தின் வேகத்தில் திரும்பிக்கூடப் பார்க்காது குழந்தையுடன் உள்ளே போனவள் போனவள்தான்.

பைசாசகுணத்தின் நிலைமை தெரிந்த விச்வநாதன் என்னதான் செய்வார் பாவம் ! தேம்பித் தேம்பி அழுதுகொண்டு நிற்கும் கிருபாவதியின் கண்ராவியைக் கண்டு சகிக்கமுடியாது துடிக்கிறார். மனைவியைத் தாறுமாறுமாகத் திட்டியும் அடித்தும் எத்தனையோ புத்திமதிகளைச் சொல்லியும் பார்த்தார். அத்தனையும் விழலுக்கிறைத்த நீர்போலாகியதே யன்றி கடுகளவு பலன்கூடக் கொடுக்கவில்லை.

ஒவ்வொரு விநாடியும் கிருபாவதி தனது மரணத்தை எதிர்பார்த்து மரண தேவதையை வேண்டுகிறாள். தற்கொலையாவது புரிந்துகொள்ளலாமா என்று துடிக்கிறாள். இந்த நிலைமையில் தன் கணவன்வந்தால் என்ன கதியாகுமோ ! என்று துடிக்கும் சமயம் முரளி ஊரிலிருந்து நேரே இங்குவந்து குழந்தையையும் எடுத்துக்கொண்டு கிருபாவதியிடம் போகலாம் என்கிற எண்ணத்துடன் வந்தான்.

சதாசிவனுக்கு இந்த கண்ராவிகளைக் கண்டு மூளையே கலங்கிவிடும்போலாகியதால் ஒருபுறம் இடிந்துபோய் உட்கார்ந்துவிட்டார். முரளி வரும்போதே மிக்க உத்ஸாகத்துடன், "ப்ரேமா...ப்ரேமா!...கண்ணு...வா...ஓடிவா... இன்று உங்கம்மாவைப் பார்க்கலாம் ஓடி வா ராஜாத்தி !"...என்று கூவியவாறு வந்தான்.

அன்று வந்ததுமுதல் உள்ளேயே அடைபட்டுக்கிடந்த கிருபாவதிக்கு என்ன தோன்றியதோ என்னவோ !... ஆவேசம் வந்தவளைப்போல் எழுந்து ஓடிவந்து "நாதா...ஸ்வாமீ ! இதோ உங்கள் அடிமை. இதோ இருக்கிறேன்"... என்று கூறி முரளியின் தனியறையில் அவன் இருகால்களையும் பிடித்துக் கொண்டு வணங்கினாள்.

முரளியின் உள்ளத்தில் அவன் வரும்போது எத்தனை ஆனந்தமும் ஆவேசமும் பொங்கித் ததும்பியதோ, அத்தனையும் கிருபாவதியைப் பார்த்தவிநாடியே பொடிசூர்ணமாகி இடி விழப் பெற்றவன்போலும் திகைட்பூண்டை மிதித்தவன் போலும் மின்ஸாரம் தாக்கியதுபோலும் அதிர்ச்சியால் தாக்குண்டு அப்படியே தலையைக்கெட்டியாகப்பிடித்துக்கொண்டு உட்கார்ந்தவன் உட்கார்ந்தேயிருந்தான்.

சில நிமிஷங்கள் கழித்து, வரண்டு சூனியமாகியுள்ள அவனது பார்வை கிருபாவதியின்மீது உலாவியது. மறுக் கணம் அதுவும் அசைவற்றுத் தண்ணீரைக் கக்கிக்கொண்டு சாய்ந்தது. பெரு மூச்சு அவன் இதயத்தைப் பிளந்துகொண்டு வருவதானது கொடிய சர்ப்பம் புஸ்புஸ் என்று சீறுவதுபோலிருந்தது. முரளியின் ஆசைக் கட்டடம்...அழகுக் கோட்டை இரண்டும் இடிந்துபோய் வெறும் பாலைவனம்போலாகியதைக்கண்டு அவனுக்கு மூளை சிதறிவிடுமோ என்றும் தோன்றியது. நெடுநேரத்திற்குப் பிறகு, "ஐயோ!...சோதனையின் கொடுமையே...என் எழில் ராணி கிருபாவதி இறந்து விட்டாளா...மகமாயி! என் சௌந்தர்ய பிம்பத்தை நீ ஸ்வீகரித்துக்கொண் டாயா?" என்ற இரண்டே வார்த்தைகள்தான் அவன் வாயிலிருந்து வெளிவந்து ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவதுபோன்ற வேதனையுடன் கிருபாவதியின் செவியில் விழுந்து தத்தளித்தாள்.

தன் மனைவியின் ராக்ஷஸத்தனத்தைப் பார்த்த விச்வநாதனுக்கு மகன் என்னவிதமாக இருக்கிறனே என்கிற சந்தேகம் உண்டாகியதால் நேரே உள்ளேவந்தார். முரளி இருக்கும் நிலைமையைக் கண்டு நடுங்கியவாறு... "முரளீ! நீ மகா கெட்டிக்காரன். அதிக படிப்புப் படித்தவன். தெய்வ சங்கல் பத்தின் ஆணையை மனிதரால் மாற்றவோ, திருத்தவோ அழிக்கவோ முடி யாது...எல்லாம் சோதனை...பகவான் செய்யும் லீலை என்று மனந்தேறு. வீணை நீயும் உன் தாயாரைப்போல் புத்திகெட்டு நடக்காதே...இன்று காலை முதல் தண்ணீர்கூடக் குடிக்காது கிடக்கும் கிருபாவதியை நீயும் நோகப் பேசாதே... மனங் கலங்கச்செய்யாதே. உன்னுடைய தாயாரும் நீயும் அழகுக்கு அடிமை யானவர்களாதலால் பகவான் உங்கள் கர்வத்தைப் பங்கம் செய்திருக்கிறர் என்று நம்பி அந்த வெளியழகு மோகத்தை இதோடு விட்டுவிடு. கிருபாவதியின் உள்ளழகு வைரத்தினும் பளபளப்பானது...முரளீ! அக்னி சாக்ஷியாகக் கை பிடித்த உத்தமியின் கண்ணீரைத் துடைத்து ஆறுதலளி...அவளைச் சாப்பிடச் செய்...உம்...எழுந்திரு"...என்று மிக்க கனிகரத்துடன் சாந்தமாகக்கூறினர்.

என்ன கூறிதான் என்ன ப்ரயோஜனம்? நல்ல சலவைத் துணியில் ஒரு கரும்புள்ளி விழுந்துவிட்டதென்றல் அந்த புள்ளியை மாற்ற சலவைக்காரனைத் தவிர வேறு யாரால்முடியும்...அதேபோல் மனமாற்றத்தை மாற்றி பழய நிலையை அளிக்கும் அரிய சக்தி அந்த எம்பெருமானிடமில்லாது வேறு மனித ரிடத்தில் ஏது? இத்தம்பதிகளின் வாழ்க்கைச் சுழல் எப்படியாகப்போகிறதோ? யார் கண்டது?

31

நாகராஜனும் கண்ணம்மாளும் கிருபாவதியை விட்டு வந்தபிறகு இதுவரை யில் முரளியிடமிருந்தோ, கிருபாவதியிடமிருந்தோ ஒரு கடிதமும் இல்லை. யாதொரு தகவலும் இல்லை, சதாசிவன்மட்டும் 'கிருபாவதிக்கு ஜலம்விட்டாயிற்று; பிழைத்துக்கொண்டாள்' என்று எழுதினர், பிறகு அவரும் ஒன்றும் எழுதாத தனல் நாகராஜனுக்கு சற்று வருத்தமாகவே இருந்தது. கண்ணம்மாளுக்கும் மகமாயி வெகு மும்முரமாக விளையாடிவிட்டுச் சென்றலும் கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கு ஒரு விபத்துமின்றி க்ஷேமமாக ஆண் குழந்தை பிறந்த செய்தியை அப்போதே முரளிக்குக் கடிதமெழுதினன்.

அக்கடிதம் முரளிக்குச் சேருவதற்குமுன்பே முன்பு கூறிய விதமாக சம்ப வங்கள் நடந்ததால் அவன் அடியோடு மாறி வேற்று மனிதன்போலானன். என்ன ஆச்சரியமான மாறுதல்! கிருபாவதி தன் மாமாவை அன்றே ஊருக்கு பலவந்த மாக அனுப்பிவிட்டாள். அவள் என்னவோ அதே வீட்டில்தான் இருக்கிறள். ஆனல் அவள் பெற்ற குழந்தையைக்கூட அவள் எடுக்கும் ஸ்வாதீனமற்று கேவலம் ஒரு வேலைக்காரிக்குள்ள சுதந்திரமும் இல்லாது உள்ளோடு உள்ளாக அடைபட்டுக் கிடப்பதைத் தவிர வேறு காணவில்லை.

மாமியாரும் பேசுவதில்லை. முரளியோ, கிருபாவதியைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. திட்டுவதோ, வெறுத்துக் கூறுவதோ, அலக்ஷியம் செய்வதோ, ஒன்றுமில்லை. ஒரு காலத்தில் தேனும் பாலும்போல் இனிப்புற்றிருந்த தம்பதிகள் இன்று அன்னியர்கள்போல் இருப்பதென்றால் இந்த பரிபவத்தை யாரால்தான் சகிக்கமுடியும்? முரளியின் மனக் கலக்கத்தின் கொடுமையில் அவன் தேகம் மெலிந்து, உருக்குலைந்து மிகவும் கேவலமாகிக்கொண்டு வருவதைக் கண்டு பெற்றோர்களின் உள்ளம் துடிக்கின்றது. கிருபாவதியின் உயிரோ பறக்கின்றது. என்னசெய்வாள் பாவம்!... கணவனிடம் வலியச்சென்று அவனுக்கான சிச்ருஷைகள் செய்வதற்கும் அருகதையற்ற நிலைமையில் அவள் கதியமைந்தது.

முரளி ஆபீஸ் போகும் நேரம் தவிர இரவு வெகு நேரத்திற்குப் பிறகே வீட்டிற்குப் படுக்கவந்தால் தன் அறைக் கதவைத் தாளிட்டுக்கொண்டு படுத்து விடுவான். அப்படியும் எப்போதாவது சமயம் பார்த்து அவனிடம் போய் கிருபாவதி கதறினால் அவளை ஒரு வார்த்தைகூட சிள்ளென்று பேசாமல் கண்ணீர் சொறிய, பரிதாபம் தேங்க, "கிருபாவதீ! என்னைத் தொந்தரவு செய்யாதே. முன்பிருந்த கிருபாவதியும் மடிந்தாள்; முரளியும் இறந்தான். தெய்வச் செயலுக்கு மனிதரால் என்ன செய்யமுடியும் என்கிற பல்லவியை நீ பாடுகிறாய். இதுவும் அப்படியே தெய்வச் செயல்; தெய்வத்தின் சோதனை. உனது கர்மாவின் பலன் என்று தேறு" என்று கூறி மறைந்துவிடுவான்.

பார்வதியம்மாள் கிருபாவதியின் கண்ணில் படாமலேயே, கையில் கொடுக்காமலேயே குழந்தையைப் பழக்கி வருகிறாளாதலால் கிருபாவதியைக் கண்டால் வீறிட்டழுவதை குழந்தை நிறுத்தவில்லை. தர்மதேவதையாகிய பார்வதியம்மாள் தன் மகனின் மெலிவையும் அவனது விசனத்தையும் கண்டு ஆத்திரம் பூராவும் கிருபாவதியின்மீதுதான் பாய்ந்தது. மறுவிவாகம் செய்வதற்காக ரகஸியமாய் ப்ரயத்தனப்படுவதற்கும் ஆரம்பித்துவிட்டாள்.

நல்ல புத்திசாலியாய், பதிவ்ருதையாய், பர்த்தாவிடம் உள்ளன்புடன் அவனுடைய க்ஷேமத்தைக் கோருகிறவளாயிருந்தால் இப்படி உடம்பில் எதுவும் உறைக்காமல் உட்கார்ந்திருப்பாளா! எப்போது தனது உருவம் குலைந்ததோ, அப்போதே தன் கணவனின் க்ஷேமத்தைக் கோரி, தானே விலகிப்போக வேண்டாமா! புத்தியில்லாது இம்மாதிரி அடம் செய்துகொண்டு இங்கிருப்பதால் அவனை அடியோடு இழந்து விதவையாகி அலையப்போவதைத் தவிர வேறு என்ன காணமுடியும்? அழகுக்காகத் தானே சமயல்காரியின் மகளைக் கட்டினான் அவனுடைய சுகவாழ்க்கையைக் கோராத மனுஷியும் ஒரு மனுஷியா!... வாழாவெட்டியாய் மாமியார் வீட்டில் உலாவ எந்தப் பெண்தான் சம்மதிப்பாள். வேறு கல்யாணம் செய்துவைக்கலாமென்றாலோ, கொட்டாப்புளிபோல் பெண்டாட்டியிருக்கையில் யார் பெண்ணைக்கொடுப்பார்கள் என்கிறார்கள். மன்மதன் போன்ற முரளி சிறியவயதில் இப்படி சன்யாசியைப்போல் வாழ்வதென்றால் வயிறு கொதிக்கிறதே. இவள் இருந்தும் ஒன்றுதான். செத்திருந்தாலும் சந்தோஷமாயிருந்திருக்கும். இப்படியா என் குடியைக் கெடுக்கவேண்டும்? ஊரில் எல்லோருக்கும் வருகிற சாவு இவளுக்கு வரக்கூடாதா! என் குழந்தை க்ஷேமப்படமாட்டானா?" என்று வேண்டுமென்றே கிருபாவதியின் காது கேட்கும்படிக்கு கூசாமல் ஓயாது சொல்வதைக் கேட்க கிருபாவதியின் இதயத்தில் ஆயிரம் வாள் கொண்டறுப்பதுபோன்று சங்கடம் செய்கிறது.

தன் கணவன் இராக்காலத்தில் வீட்டிற்கு வராதுகூட வெளியில் அலையத் தலைப்பட்டதை நோக்க கிருபாவதிக்கு பற்பல சந்தேகங்கள் தோன்றி வதைக்கின்றன. அனியாயமாய்க் கெட்டலைந்து எங்கே உடம்பு கெட்டுவிடுமோ! அன்றி வேசிகள் வலையில் வீழ்ந்து உடம்பும் சொத்தும் கவுரவமும் சேர்ந்து நாசமாகிவிடுமோ! என்ன செய்வேன்? இப்படியுமா ஒருகாலம் வரும்?" என்று தத்தளித்து உருகுகிறாள்.

"அவருடைய சந்தோஷ வாழ்க்கைக்கு நானல்லவா முட்டுக்கட்டையாயிருக்கிறேன்... ஐயோ! இந்தப் பாபாத்மாவின் வாழ்நாள் முடியக்கூடாதா! தற்கொலையாவது செய்துகொண்டு என் அன்பரின் சுகத்திற்குத் தடங்கலில்லாது செய்துவிடலாமா?" என்று பலவித எண்ணங்கள் சமுத்திர அலைபோல் மோதி வதைக்கின்றன. பிறரிடம் சொல்லி அனுதாபப் படுவதற்குத்தான் யாரிருக்கிறுர்கள்?

அவளால் சகிக்கமுடியாத வேதனையுடன் தவிக்கையில் ஒரு தினம் முரளி வரும் நேரத்தைக் கவனித்துக்கொண்டிருந்து அவனறியாதபடி அவன் விடுதியில் புகுந்துகொண்டு அவன் வரும்போதே காலை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "ஸ்வாமீ! பரம தயாளுவான தாங்கள்கூட இப்படி இருக்கலாமா! நான் சொல்வதற்கு வேறு என்னதான் இருக்கிறது? தங்களுடைய இன்ப வாழ்க்கையின் நாதமாக நான் அமைந்திருந்த காலம் மறைந்துபோய், துன்பப் படுகுழியில் நானே தள்ளிவிடும் படுபாவியாக அமைந்துவிட்டேனே...தெய்வச் செயலுக்குக்கூட மதிப்பு கொடுக்காவிடில் மனிதச் செயலுக்கு மன்னிப்பு உண்டாகுமா! தாங்கள் இவ்விதம் தேகம் மெலிந்து பாழாவதைக் கண்டு சகிக்க முடியவில்லையே! தங்கள் தாயார் விடும் பாணத்தை அடியோடு பொறுக்கமுடியவில்லையே... நானும் ஒரு அபலைதானே...என்னுடைய சௌந்தர்யம் குறைந்திருப்பினும் வாய்க்கு வாய் நீங்கள் கொண்டாடி இன்புற்று வந்த எனது மதுரகீதத்தைக் கூடவா வெறுக்கிறீர்கள்? தங்கள் திருவடியில் பணிசெய்தும் பாடியும் தங்களை மகிழ்விக்கும் பாக்யம்கூட எனக்குக் கொடுக்கக்கூடாதா!

வேலைக்காரிக்காவது இந்த வேலையை நாம் செய்யவேண்டும் என்கிற ஒரு நிர்ணயமும் சுதந்திரமும் இருக்கிறது. அதுகூட இல்லாத நான் என்னதான் செய்வேன்? பகவான் என்னைக் கண் திறந்து பார்க்கமாட்டேன் என்கிறுனே! தற்கொலைக்குக்கூட நான் துணிந்துவிட்டேன். ஆனல் உங்களுடைய கௌரவமும்... கண்மணி பிரேமாவின் பரிதாப பிம்பமும்... என்று கூறி முடிக்குமுன்... முரளி அலறியவன்போல் "ஹா... கிருபாவதீ! வேண்டாம்; வேண்டாம்... அத்தகைய விபரீத காரியம் எதுவும் செய்துவிடாதே! பகவான் என்னை சோதித்ததுபோதும்; நீயும் சேர்ந்து சோதிக்காதே. என் பிழைப்பை நினைக்க என் தலை சுழலுகிறது. முதலில் என் பிராணன் போய்விடக்கூடாதா என்றுதான் தவம் செய்கிறேன்...

கிரு:—(இடைமறுத்து)... ஐயோ! அந்தப் பரிபவமும் இப் பாவிக்கு பாக்கி இருக்கிறதா! வேண்டாம்...வேண்டாம்...சொப்பனத்திலும் வேண்டாம்... ஸ்வாமீ!... நான் இன்று தைரியமாக இங்கு வந்ததற்குக் காரணம் முக்யமாக உங்கள் சந்தோஷ வாழ்க்கையின் இன்பஜோதியை ஏற்றுவதற்கேயாகும். உபயோகமற்றக் கட்டையாகிய நான் தங்களுடைய சந்தோஷத்தையும் அலர்ந்த முகத்தையும் கண்டு களிக்கவுமே இரவு பகல் பிரார்த்தனை செய்கிறேன். தங்கள் தாயார் தங்களுக்குத் தகுந்த பெண்ணைத் தேடி மணம் செய்விக்க இரவு பகல் பாடுபடுகிறுர். அதை நான் என் முழு மனத்துடன் விரும்பி மகிழ்கிறேன். நீங்கள் உங்கள் இஷ்டம்போல் மணம் செய்துகொண்டு ஆனந்தமாக இருப்பதை என் கண்ணுரக்கண்டு களிக்கவே காத்திருக்கிறேன். ஒரு பெண் குழந்தையும் பெண்டாட்டியும் இருக்கும்போது பெண் கொடுக்க யோசிப்பதாக உங்கள் தாயார் திட்டுகிறுர்கள். நான் எத்தனை தியாகஞ்செய்யமுடியுமோ, அத்தனையும் செய்வதற்குக் காத்துக்கொண்டிருக்கிறேன். பிரேமாவை எடுத்துக்கொண்டு நான் என் மாமாவிடம் போய்விடுகிறேன். பிறகு நீங்கள் சுகமாக மறுமணம் செய்துகொண்டிருங்கள். என் பாழும் ஜென்மாவுக்காக தங்கள் காலம் முற்றும் சங்கடப்படவேண்டாம். இதைத் தெரிவிக்கவே நான் வந்தேன்... என்று துக்கம் தேங்க விக்கியவாறே கூறினள்.

இவ் வார்த்தையைக் கேட்டுச் சகிக்கமுடியாத முரளி காதுகளைப் பொத்திக் கொண்டு சில விநாடிகள் துடிதுடித்தான். அடுத்த நிமிஷம் "கிருபாவதீ!... தயவு

செய்து நீ எழுந்துபோய்விடு...என்னை சோதிக்காதே...என் மனப்புண்ணைக் கிளறுதே. என்னை விட்டுவிடு...என்னால் இந்த துன்பங்களைப் பொறுக்கமுடிய வில்லை. நீ இவ் வீட்டைவிட்டு எங்கும் போகக்கூடாது. இங்கேயே இரு. இதைத் தவிர உனக்கு நான் என்ன உதவி செய்யப்போகிறேன்?'' என்று கூறிக் கொண்டே எழுந்து போய்விட்டான். பாவம்! அதற்குமேல் என்ன செய்வாள்! விதியை நொந்துகொண்டே தன் விடுதிக்கு வந்தாள்.

அதற்குமேல் அவளால் பொறுக்கவேமுடியாது எல்லைகடந்த துக்கம் பொங் கியது. இரவு முற்றும் நெருப்பில்பட்ட மெழுகுபோல் உருகினாள். நித்திரா தேவியும் அவளை அடியோடு வெறுத்து நிராகரித்தாள். கணவன் ஒரு கடுகளவு கூடக்கோபிப்பதில்லை. மாமனாரோ ஆதியிலிருந்த ஆசையைவிடப் பதினாயிரம் மடங்கு கிருபாவதியிடம் பிரியமாயிருக்கிறாரேயன்றிக் குறைவில்லை.

தன் மகனுக்கும் பலவிதத்தில் கூறிப் பார்த்தார். எது சொல்லி என்ன பயன்? ஒரு மலையை அசைத்தாலும் அசைக்கலாம். முரளியின் மனத்தை அசைக்க அவரால் முடியாது போயிற்று. "நீ இப்படி இருந்தால் மகா பாதகம். ஒரு பெண்ணை, அதிலும் கடவுளின் சோதனைக்கு ஆளாகிய உத்தமியை நீ இவ் வாறு துடிக்கச் செய்வது மனித தர்மத்திற்கு மிகவும் பொருந்தாது. இந்த மகத் தான பாபத்தின் விளைவு எப்படியிருக்குமோ? என்ன செய்யுமோ! நீ கேவலம் வெளியழகின் மோகத்தை விட்டுவிடு. வீட்டில் ஒரு குழந்தையின் வயிறெரியச் செய்வதை என்னால் கண்டு சகிக்கமுடியவில்லை. நீயும் உன் தாயும் இப்படி சதி காரர்களாயிருந்தால் நான் தற்கொலையாவது புரிந்துகொள்வேன் அல்லது சன்யாசம் வாங்கிக்கொண்டு ஓடிவிடுவேன்'' என்று பலதரம் சொன்னார்.

"மனிதன் என்றால் அவனிடம் நாலுவித குணமுந்தான் இருக்கும். நீங்களும் அப்படி ஏதாவது செய்துகொள்ளவேண்டுமென்கிற விதி இருந்தால், அதை என்னால் தடைசெய்து மாற்றமுடியுமா! நான் கிருபாவதியிடம் நடந்துகொள்வது மிகவும் தப்பிதம். மகா பாபம். ஈச்வரனுக்கே அபராதம் செய்வது போன்றது தான். எல்லாம் நான் அறிந்துதான் செய்கிறேன். என்ன செய்வது! குற்றம் செய்யத் துணிந்த மனது குணத்தைக்கொள்ள இசையவில்லையே. என்னசெய் வேன்?''.. என்று கண்டிப்பாய் பதில் கூறிவிட்டான்.

நிர்க்கதியாய் நின்றுள்ள கிருபாவதிக்கு, தானும் மேற்சொல்லியதுபோல் செய்துவிட்டால் அடியோடு ஆதரவு குறைந்துவிடுமே என்கிற எண்ணத்தினால் பொறுத்துக்கொண்டு காலத்தைக் கடத்துகிறார்.

கிருபாவதி அழுதுகொண்டே படுத்திருக்கையில் தன் மாமியாரும் இன்னும் யாரோ பேசும் குரல் கேட்டு அதை உற்று கவனிக்கத் தொடங்கினாள்.

பார்வதி:—ஆமாம்... நீங்கள் முரளியைக் கவனித்தீர்களா! தினம் அவன் இராக்காலத்தில் எங்கு அலைகிறான்? அதைக் கண்டுபிடித்தீர்களா!

கல்யாணத் தரகன்:—அதற்காகத்தானே நானும் சுற்றி அலைகிறேன். நீங்கள் நினைத்தபடி அவன் எந்த கெட்ட மார்க்கத்திலும் ப்ரவேசிக்கவே இல்லை. அவனுடைய காலில் ஒட்டிய தூசிகூட அம்முறையில் இறங்காது. தினம் ஒண்டிக் கட்டையாய் ஆற்றுமணலில் படுத்துக்கிடக்கிறான். கூட யாராவது துஷ்ட சகாக்கள் இருக்கிறார்களா என்றும் ஆராய்ந்தேன். ஒருவருமில்லை. அவனிடமே கிட்ட நெருங்கிப்பேசி மனத்தையறிந்தேன். 'ஒரு பெண்ணிருக்கையில் மற்றொரு பெண்ணைச் செய்துகொள்ள என் மனது இசையவில்லை. அவள்மீது ஏதாவது குற்றமோ கோளாறோ ஒன்றுமில்லை. நானாக இப்படி இருக்கையில் அவளுக்கு த்ரோகம் செய்யவும் மனது இடங் கொடுக்கவில்லை.' என்று பிடிவாதம் செய் கிறாள். நான் இப்போது பார்த்து வந்திருக்கும் பெண்வீட்டாரிடம் சகல விஷ யத்தையும் கூறினேன். அவர்கள் 'ஒரு பெண் ஒருவிதமான கோளாறுமின்றி இருக்கையில் எப்படி பெண்ணைக் கொடுப்பது?' என்கிறார்கள். நீங்கள் ஒன்று செய்தால் தேவலை. நம்பிக்கையான ஒரு வேலைக்காரியைப் பிடித்துக் கைவசம் செய்துகொண்டு இவளை எப்படியாவது நல்லதனம் செய்து ஊருக்கனுப்பிவிட்டு

பயித்தியம் பிடித்துவிட்டதென்று கூறிவிடுங்கள். பிறகு தானே முரளி இசைவான். பெண் கொடுப்பவர்களும் ஏதும் சொல்லமாட்டார்கள். என்ன சொல்கிறீர்கள்?—என்றான்.

இந்த வார்த்தை கிருபாவதியின் காதில் விழுந்ததும் அவளுக்கு எப்படித்தான் இருக்கும்! உடம்பே பற்றி எரிவதுபோலிருக்கிறது. திரும்பத் திரும்பத் தான் நினைப்பதெல்லாம் தனது தற்கொலையை தவிர வேறு என்ன இருக்கிறது. அப்படிச் செய்துவிட்டால் தனது குழந்தையின் எதிர்கால வாழ்க்கையில் பல துன்பங்கள் ஏற்படுவதோடு தன்னுடைய கணவனின் கவுரவமும் குலைந்துபோய் அதற்கு ஏதாவது ஹானி விளைந்துவிட்டால் என்ன செய்வது என்ற யோசனையினால் பல்லைக்கடித்துக்கொண்டிருக்கிறாள் பாவம்.

பார்வதியம்மாள் தனது துணிவான ஆத்திரத்தில் தலைகால் தெரியாமல் பல்லைக் கடிக்கிறாள். கையைச் சுடுக்குகிறாள். "என்னவோ நான் எத்தனைக் கெத்தனை உயர்வான பெண்ணைக் கல்யாணம் செய்து என் முரளியையும் அவளையும் பார்க்க நினைத்தேனே அத்தனைக் கத்தனை ஒரு சமயல்காரியின் மகள் வந்து லபித்து என்னாசையை நாசம் செய்தாயிற்று. அந்த மட்டோடு நிற்காது இப்படியுமா வந்து சேரவேண்டும்? ஊரில் எத்தனையோ பேர்கள் கையும் மனமும் துணிந்து தனக்குப் பிடிக்காத மருமகளை அடித்து இம்சித்து மண்ணெண்ணெயை ஊற்றிக் கொலைசெய்துவிடுகிறார்களாம். அதை நினைக்கக் கூட தேகம் நடுங்குகிறது. இந்த ஊரில்கூட ஒரு மகாபாவி மண்ணெண்ணெயை ஊற்றிக் கொலைசெய்துவிட்டாளாம். அப்படியெல்லாம் செய்ய எப்படித்தான் மனது துணிகிறதோ! நல்லதனமாக நான் அவளைப் போய்விடும்படி பலதரம் சொல்லியும் ஜடம்போல் உட்கார்ந்திருக்கிறாளே! என்ன செய்வேன்? எப்படித் தான் கழுத்தைப்பிடித்துத் தள்ளுவது? நான் ஒரு பாவமும் செய்யாதிருக்கையில் மருமகளைப் படுத்துகிறாள் என்கிற பெயர் வந்துவிட்டது. இந்த நிலைமையில் நான் என்னதான் செய்வேன்? மானமுள்ள பெண்ணாயிருந்தால் தானாக ஓடிப் போகக் கூடாதா! இப்படியா என் தலையெழுத்து இருக்கும்?" என்று அழுதாள்.

இதற்குமேல் கிருபாவதியால் பொறுக்கமுடியாது போய்விட்டது. அவளையும் மீறி விசும்பி விசும்பி அழுதுவிட்டாள். இந்த ஓசையைக் கேட்டுத் தரகன் போய்விட்டான். கிருபாவதி அணைகடந்த துக்கத்துடன் தைரியமாய் மாமியார் முன்புவந்து காலில்விழுந்து காலை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு. "மாமீ!... மாமீ!...என் நிலைமையை நான் அறியாமலில்லை. இரவு பகல் என் உள்ளம் கொதிக்கும் கொதிப்பை என்னைப் படைத்த ஈசன்தான் அறிவான். என் அன்பரின் சுகவாழ்க்கைக்காகநான் என்னுயிரையும் அர்ப்பணம் செய்யத்தயாராயிருக்கிறேன். மாமீ! என் ப்ரேமாவை என்னிடம் கொடுத்து என்னை யனுப்பிவிடுங்கள். நான் இந்தப் பக்கமே இல்லாது எங்காவது போய்விடுகிறேன். என் பாழாப்போன இருண்ட பிறவிக்கு என் கண்மணியின் முகாரவிந்த ஜோதியையாவது கண்டு நான் காலத்தைத் தள்ளுகிறேன். என் குழந்தையுடன் ஓடிவிட்டதாக என்மீது அபவாதத்தையே கூறி உங்கள் மகனுக்கு மறுமணம் செய்வித்து அவரை இன்புறச் செய்யுங்கள் போதும். இன்றே நான் போய்விடுகிறேன். என்மீது இம்மட்டுமாவது கிருபை செய்யுங்கள்" என்று கண்ணீர் சொரிய மன்றாடினாள்.

கிருபாவதியின் செய்கை பார்வதியம்மாளுக்கே எதிர்பாராத வியப்பும் ப்ரமிப்பும் உண்டாக்கிவிட்டது. எனினும் குழந்தையைக் கொடுக்கமாத்திரம் மனம் இசையவில்லை. கிருபாவதீ! உனக்கு இத்தனை நாள் கழித்தாவது இத்தகையபுத்தி வந்ததற்கு மிக்க சந்தோஷப்படுகிறேன். ஆனால் ஒன்று. உன்னுடைய குழந்தையின் க்ஷேமத்தையும் நன்மையையும் கோரி நான் சொல்கிறபடியே கேளு. நீ இச்சமயம் ஓடிவிட்டதாக வதந்தி வந்தால் உன் கணவனின் கவுரவத்திற்கும் குழந்தையின் பிற்கால வாழ்வுக்கும் இளப்பமாகிவிடும். குழந்தையை யாரும் கட்டமாட்டேன் என்று சிறுமை செய்வதற்கு இடமுண்டு.

பெண் குழந்தையாதலால் அதன் எதிர்காலத்தின் சாவி உன்னிடமல்லவா இருக்கிறது!... நீ நன்ருக யோசனைசெய்து பாரு...

கிருபா:—மாமீ! எனக்கு யோசனை செய்வதற்கு என்ன இருக்கிறது? என் மூளையே கலங்கிவிட்டதுபோல் இருக்கிறது... நீங்கள் சொல்வதும் வாஸ்தவம்... ஒன்று செய்யட்டுமா! அதாவது எனக்கு மூளை கலங்கிவிட்டதுபோல் நான் நடிக்கிறேன். விவாகம் ஆகும்வரையில் அப்படியிருக்கட்டும்; அதற்குப் பிறகு என் குழந்தையை என்னிடம் கொடுத்துவிடுங்கள். அந்த ஒரு கடுகளவு சந்தோஷத்தில் நான் என் தலைவிதியை எண்ணி காலத்தைக் கழிக்கிறேன். என் ப்ராணநாதரின் மகிழ்ச்சியைக் கோருவதற்கு நான் எப்போதும் தயாராக இருக்கிறேன்... இந்த ரகஸியம் நம்மிருவரைத் தவிர வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். இந்த மகத்தான உபகாரத்தைச் செய்து உங்கள் மகனுடைய ஆனந்த வாழ்க்கையின் தீபத்தை ஏற்றுங்கள். என் மாமாவுக்கு நீங்களே ஒரு கடிதமெழுதி அவரை வரவழைத்து என்னை அவரோடு அனுப்பிவிடுங்கள். கல்யாணமெல்லாம் முடிந்ததும் என் ப்ரேமாவை என்னிடம் கொடுத்துவிடுங்கள்'' என்று கண்ணீர் சொறியக் கெஞ்சினாள். கிருபாவதியின் பரிதாபம் பார்வதியம்மாளின் இதயத்தில்கூட உறைத்து, ஏதோ ஒரு கடுகளவு பாதித்ததென்ருல் அதைவிட ஆச்சரியம் வேறு என்ன இருக்கிறது?

32

சதாசிவத்தின் இறகெல்லாம் ஏற்கெனவே உதிர்ந்துவிட்டது. கிருபாவதியின் பரிதாப நிலைமையை அன்று நேரில் கண்ட பிறகு அவர் மனது அடியோடு உடைந்துபோய் பக்தி மயமாகியது. ஒண்டிக்கட்டையாக இனி இங்கிருப்பதில் உபயோகமென்ன! எங்காவது க்ஷேத்திரயாத்திரை செய்து கடைசீ காலத்தைக் கழிப்போம் என்கிற நம்பிக்கையுடன் வீடுவாசல் எல்லாவற்றையும் ஒழித்துத் தமக்கிருந்த காலணு தம்பிடியை எடுத்துக்கொண்டு போய்விட்டார். இந்த தகவல் கிருபாவதிக்குத் தெரியாது. மாமா ஊரிலிருப்பதாகவே எண்ணியிருந்ததால். தன் மாமியாரிடம் முன் ஏற்பாடு செய்திருந்தபடியே கடிதம் எழுதச்செய்தாள்.

கிருபாவதியின் நிலைமையில் ஏற்கெனவே பயித்தியம் பிடித்திருப்பது போலத்தான் இருந்தாள். இப்போதோ கேட்கவேண்டாம். தன்போக்காக அழுவது, சிரிப்பது, பாடுவது, இதைத்தவிர வேறு எதுவுமே இல்லை. பாவம், விச்வநாதனும் முரளியும் இந்த நாடகத்தை உண்மை என்றே நம்பிக் கண்ணீரை உதிர்த்தார்கள். பார்வதியம்மாள்மட்டும் வெகு குசாலாக புதிய சம்மந்தியாக வரப்போகும் அம்மாளை ரகஸியமாக அழைத்துவந்து ஜன்னலால் கிருபாவதியைக் காட்டி, 'உம். இந்தக் கண்ராவி ஸ்வரூபத்தைப் பாருங்கள். நன்ருகக் குடித்தனத்திற்கு ஏற்றவளாயிருந்தால் ஏன் இவளைத் தள்ளிவிட்டு இன்னொரு பெண்ணைக் கல்யாணம் செய்வோம்? எல்லாம் எங்கள் தலைவிதி. உபயோகமற்ற பெண் என்ருல் நீங்கள் நம்பமாட்டேன் என்று சொன்னீர்களாம். அதற்காகத்தான் இன்று அழைத்துவரச் செய்தேன்'' என்ருள்.

வெகு தடபுடல் பேர்வழியாய் அட்டகாஸத்துடன் வந்திருக்கும் அம்மாள் கிருபாவதியை உற்று உற்றுப்பார்க்கிருள். கிருபாவதி இந்த கண்ராவியைத் தெரிந்துகொண்டு பின்னும் பலமாக நடித்துச் சிரிப்பதும் குதிப்பதும் முகத்தைச் சுளித்து அழகுகாட்டி அழுவதையும் கண்ட அந்தம்மாள், ''அட க்ரகசாரமே! இத்தகைய அலங்கோலப் பீடையை நீங்களாக இருப்பதால்தான் வீட்டில் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். நாஞக இருந்தால் அன்றே தாயார் வீட்டிற்கோ, ஆஸ்பத்திரிக்கோ அனுப்பியிருப்போம். இந்த உள் ரகஸியம் யாருக்கம்மா தெரிகிறது!'' 'பெரியம்மை புறப்படுவது மனிதச்செயலா... தெய்வச்செயல். அத்தகைய தெய்வச் செயலையும் லக்ஷ்யம் செய்யாது பார்வதியம்மாள் மருமகளைப் படுத்துகிருள். தள்ளிவைக்கப் பார்க்கிருள். இந்த அக்ரமம் எங்கு உண்டு. இதே மகமாயி பார்வதிக்கே வந்துவிட்டால் அப்போது அவள் என்ன செய்வாள். இப்படியும் நெஞ்சழுத்தம் இருக்குமா! இன்று அம்மைவந்தது என்று ஒரு பெண்ணைத்

தள்ளிய புண்ணியவதியும் அவள் மகனும் நாளை இன்னொரு வியாதிவந்தது என்று உன் மகளையும் தள்ளிவிட்டால் என்ன செய்வாய்? யோசித்து அந்த இடத்தில் சம்மந்தம் செய்'' என்று பலபேர் எனக்குச் சொன்னதால்தான் நான் பெண்ணை நேரில் பார்க்கவேண்டும் என்று வந்தேன். இத்தகைய பயித்தியத்தைக் கட்டி யாரால் மாரடிக்கமுடியும்? சரி. இனிமேல் எத்தகைய சந்தேகமும் இல்லை. இந்த பெண் இங்கிருந்தால் என் மகள் பயப்படுவாள். அவள் ஆயிரம் ரூபாய் சம்பளக்காரரின் மகள். சோபாவைத் தவிர வேறு இடத்தில் உட்காரமாட்டாள். அத்தனை அருமையாக வளர்த்திருக்கிறோம். ஆகையால் இந்தப் பயித்தியத்தை முதலில் அனுப்பிவிடுங்கள். பிறகு கல்யாணம் நடக்கலாம்.'' என்று சொல்வதைக்கேட்கக் கேட்க கிருபாவதியின் மனது துடிக்கிறது.

முரளிக்கு உள்ளூர கிருபாவதியின்மீது ஆசையும் அனுதாபமும் இருந்தபோதிலும் ஒண்டிக்கட்டையான வாழ்வைமட்டும் சகிக்கமுடியாது தவித்தான். தனது கவுரவம் அதிகரிக்க அதிகரிக்க அவன் துக்கமும் ஏக்கமும் கூடவே பெருகியது. கிருபாவதிக்குப் பயித்தியமும் பிடித்துவிட்ட பிறகு மனது ஒரு நிலையில் நிற்காது தத்தளித்தது. குழம்பித் தவித்தான்.

புதிதாக பார்த்திருக்கும் பெண்ணை பார்வதியம்மாள் பலதரம் பலவிதமான அலங்காரத்துடன் அழைத்துவந்து காட்டி முரளியின் மனத்தைத்தளரவைத்தாள். இளங் காளையானதாலும், கிருபாவதி அடியோடு இறந்ததற்குச் சமமாகிவிட்டதாலும், 'அழகு, அழகு' என்று அழகுக்கே அடிமையான சுபாவமுடையதால் அழகைப் பார்த்தும் அவனையறியாமலேயே அவன் மனது முற்றிலும் மாறியது. கிருபாவதியை வந்து பார்ப்பான்... கண்ணீரை உதிர்ப்பான். பயித்தியமாக நடிக்கும்போதும் அவளுடைய மதுரகீதத்தின் மதுவைப் பருகிப் பேரானந்தக் கூத்தாடுவான்... எது செய்து என்ன பயன்? புதிய மோகம் சிறுகச் சிறுகத் தலைக்கேறச் செய்த சாமர்த்தியம் ஸ்ரீமதி பார்வதியம்மாளுக்கே உரித்தாகியது.

சம்மந்தியம்மாள் சொல்லியபடியே பார்வதியம்மாள் கிருபாவதியைத் தானே அழைத்துக்கொண்டுபோய், மாமன் வீட்டிலிருக்கிறாரா இல்லையா என்பதையும் பார்க்காது அவ்வூர் கோடியில் விட்டு விட்டு, "கிருபாவதீ! நான் ஊருக்குள் வந்தால் நாலுபேர் என்னை ஏதாவது ஏசுவார்கள். அதனால் அந்த ஜட்கா வண்டியில் உன்னை ஏற்றி அனுப்புகிறேன். அழாதேம்மா! நாம் கொடுத்து வைத்தது இதுதான். உன்னுடைய இந்த த்யாகத்தினால் முரளியின் இருண்ட வாழ்க்கையில் ஒரு ப்ரகாசம் உண்டாகிறது. பதிபக்தியைத் தவிர பெண்களுக்கு வேறு என்னடியம்மா இருக்கிறது. பர்த்தாவின் சந்தோஷமே நமக்கு ப்ரம்மானந்தம்தானே. தன் கணவனைத் தாசிவீட்டுக்கு நளாயினி அனுப்பவில்லையா... உம்... என் மனதுமட்டும் தவிக்காமலா இருக்கிறது? எத்தனையோ கலங்கித் துடிக்கிறது. என்னசெய்யலாம்? கால தேவதையின் தாண்டவம்...உன் கணவன் முகத்தில் இந்த சில தினங்களாக தெம்பும், தெளிவும் உண்டாகியிருப்பதைக் காண உள்ளம் பூரிக்கவில்லையா! அவன் என்ன கிழமா கட்டையா! நல்ல எவ்வன வயசு உடையவனல்லவா! எத்தனையோ சந்தோஷமாக இருக்கவேண்டிய காலத்தில் சன்யாசியைப்போலும் சாமியாரைப்போலுமானால் அது ஆயிசு முடிவுக்கே ஏதுவாகிவிடாதா! பிறகு உன்கதி... ஐயையோ! நினைக்கும்போதே நடுங்குகிறது. கிருபாவதீ! நீ முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் இன்னொன்று உன் மாமனார் உன்னிடத்தில் அதிக ப்ரீதியாயிருப்பதாலேயே அவரை நீ முற்றும் நம்பாதே. அவருடைய குணம் எனக்குத் தெரியுமேயன்றி வேறு யாருக்கும் தெரியாது. வீணாக நீ பழிக்கும் பாவத்திற்கும் ஆளாகாதிருக்கும்படி பார்த்துக் கொள்ளு. இதுதான் நான் சொல்லவேண்டியது. இந்தா! இந்த ரூபாயை உன் கைச்செலவுக்கு வைத்துக்கொள்ளு. அவ்வப்போது வேண்டுமானால் உன் மாமாவை எழுதச்சொல்லு'' என்று ப்ரமாதமான பரிவும், வேதாந்தமும், தத்வோபதேசமும் காட்டிப் பேசுகிறாள்.

கிருபாவதியின் அயோமயமான நிலைமையில் இந்த வார்த்தைகள் எதுவுமே காதில் விழவில்லை. கொலைக்களத்திற்கு அழைத்துச் செல்லப்படும் கைதியைவிட ஆயிரம் பங்கு அதிகரித்த வேதனையும் குழப்பமும் துக்கமும் அவளைச் சித்திர வதை செய்கிறது. இந்த நிலைமையே தனக்கு உண்மையாகப் பயித்தியம்பிடித்து விடுமோ! என்றும் பயம் நடுங்குகிறது.

"மாமீ! எனக்குப் பேசவே தெரியவில்லை. ஏதோ சொல்லமுடியாத சங்கடம் செய்கிறது. எப்படியாவது என் அன்பர் ஆனந்தமாயிருந்தால்போதும். சமையல் காரியின் மகள் ஒழிந்தாள் என்று சும்மாவிருந்துவிடாதீர்கள். என் பிரேமாவை சீக்கிரம் என்னிடத்தில் விட்டுவிடுங்கள்; அவளில்லாது என்னுயிர் போய்விடும். என் கண்மணியைக் கொடுத்துவிடுங்கள். எனக்கு இனி அதொன்றுதான் ஜீவ நாடி என்பதை நான் கூறவேண்டாம். புதிதாக வரப்போகிறவளையாவது மக மாயி அண்டாது காப்பாற்றவேண்டும். எனக்குப் பணமே வேண்டாம். என் ஒரு வயிற்றை வளர்க்க என் மாமாவிடம் போதிய ஐவேஜ் இருக்கிறது. கல் யாணம் கழித்ததும் என் பிரேமாவை விட்டுவிடுங்கள்..." என்று கதறினள்.

பார்:—அம்மா! இதை நீ சொல்லவேண்டுமா! உன் பிரேமாவை நீ இன்னும் அதிகநாள் பிரிந்திருக்கவேண்டாம். சீக்கிரமே கொடுத்துவிடுகிறேன். நீ கவலைப்படாதே—என்று வெகு நயமாகக் கூறி அவளை ஒரு ஜட்காவில் ஏற்றி விட்டுத் தன் காரில் சென்றாள்.

ட்ரைவருக்குத் தெரியாதிருக்கும்பொருட்டு இவர்கள் பேசும்போது அவனை வெளியில் அனுப்பிவிட்டாள். ஏதோ மகத்தான காரியத்தைச் சாதித்துவிட்ட தாயும், பெரிய வெற்றி மாலையைச் சூடியதாயும் பார்வதியம்மாளுக்கு ஒரு புதிய உத்ஸாகமும் தோற்றமும் உண்டாகியது. ஆனல் விச்வநாதனுக்கு எப் படித் தோன்றியது தெரியுமா! வீட்டிலிருந்த கிருகலக்ஷ்மியை இந்தப் பாவி வலுக்கட்டாயமாக அனுப்பிவிட்டதாயும், இனி ஏதோ தன் குடும்பத்திற்கு மூதேவியின் தாண்டவம் புகுந்து வாட்டப்போவதாயும்தான் தோன்றியது.

அட்டகாஸமாய் வரும் பார்வதியைக் கண்டு, "படுபாவி...அந்த பரதேசிக் குழந்தையை எங்கும் அனுப்பவேண்டாம். நமது சிறிய வீட்டிலேயே இருக் கட்டும் என்று பலதரம் முட்டிக்கொண்டேனே! கேட்காமல் கொண்டு தள்ளிய பிறகு உன் மனம் குளிர்ந்ததா! லக்ஷ்மியை வீட்டைவிட்டு ஓட்டியமாதிரி அவளை ஓட்டியாகிவிட்டதா! இனி உன் கட்டையை நிம்மதியாகப் போடலாமா! நீயும் உன் மகனும் செய்த சதிதான் அந்த உத்தமிக்குப் பயித்தியம் பிடித்ததேயன்றி வேறில்லை. இனி உங்கள் முகத்தில்கூட நான் விழிக்கப்போவதில்லை...என்று சிடுசிடுத்துக் கூறினர்.

வெகு நாணயமாய்ப் பேசுகிறவளைப்போல் பார்வதியம்மாள் அபிநயித்து, 'ஆமாம்; என்று பார்த்தாலும் இதே போராட்டம்தான். முரளியின் கண்ருவி உங் களுக்குக் கண் தெரியவில்லையா? அவன் இந்த சிறு பிராயத்தில் ஆண்டிப் பரதேசியாகிவிட்டால் உங்கள் மனது குளிர்ந்துவிடுமா! அலங்கோலமான கிருபா வதியை அவன் கண்முன்னல் பார்த்துக்கொண்டே இருந்தால் அவனுக்குப் பயித்தியம்பிடித்து நம் குடும்பம் அலங்கோலமாகிச் சிதறிவிடுமேயன்றி வேறு லாபமில்லை. காலுக்கு உதவாத செருப்பைக் கழட்டி எறியவேண்டியதுதானே! இதைக்கூடவா சொல்லவேண்டும். வீண் குபார் செய்து கலக்கத்தை உண் டாக்கவேண்டாம். காதும் காதும் வைத்ததுபோல் நாம் இந்த கல்யாணத்தை முடித்துவிட்டு மறு காரியம் பார்க்கவேண்டும். முரளிக்கு இருக்கும் கௌரவமும் பெருமையும் விருத்தியாவதைப் பார்க்காது இப்படி அநியாயம் செய்யவேண் டாம்" என்று கூறியவாறு உள்ளே சென்ருள்.

என்ன சொல்லியும் விச்வநாதன் மனது என்னவோ சமாதானப்படவில்லை. கிருபாவதியைப் பறிகொடுத்துவிட்டது போன்றும், தமக்கு ஏதோ பயங்கரமான போதாக்காலங்கள் வந்து சூழப்போவதுபோன்றும் ஒரு பயங்கரம் மனத்தில் தோன்றி வாள்கொண்டறுக்கின்றது. காரியம்கெட்டபிறகு என்னசெய்யமுடியும்!

முரளிக்கு பழைய துக்கமும் ஏக்கமும் விலகி புதிய சந்தோஷம் உதயமாகியதால் அவன் பயித்தியக்காரியை மறந்தே போய்விட்டான். தனக்கு ஆப்த நண்பனாகிய நாகராஜனுக்குத் தான் கடிதமே எழுதி வெகு நாட்களாகிவிட்டதால் அவனுக்குக் கல்யாணக் கடிதம் அனுப்பவும் சற்று அஞ்சினான்.

ஏனெனில் நாகராஜன் நியாயத்திற்கும் தர்மத்திற்கும் கட்டுப்பட்டவன். பயித்தியம் பிடித்ததால் மறு விவாகம் செய்வதாகவே அவன் நினைக்கமாட்டான். மகமாயி விளையாடியதனாலேயே தள்ளியதாகத்தான் நினைப்பானாதலால் அவனுக்குக் கடிதமே எழுதாதிருப்பதுதான் நலம்'' என்று முடிவு கட்டினான்.

பார்வதியம்மாள் மனங்குளிர, கண்குளிர இதயம் பூரிக்க மறு விவாகம் நடந்தேறியது. புதிய மருமகள் சாக்ஷாத் ஸ்ரீமகாலக்ஷ்மியைப்போல் அழகாயும் ஆனந்த ஸ்வரூபமாயும் வந்த பெருமையில் பார்வதியம்மாள் சரிக்குச் சரியான சம்மந்தம்செய்த மகிழ்ச்சியில் ஒரு பூதம்போல் பின்னும் உப்பினாள். ஆண்பிள்ளைகளின் மனத்தைக் கேட்கவேண்டுமா !... முரளி மறுமலர்ச்சி யுலகத்தின் ஆனந்த பவனத்தில் அகமகிழ வாரம்பித்தான். கிருபாவதியை அடியோடு மறந்தான் என்று சொல்வதில் குற்றமென்ன இருக்கிறது?

தனக்காக மகத்தான த்யாகத்தைச் செய்த உத்தமியின் ப்ரபாவம் யாருக்குத் தெரியும்? கல்யாணமாகிய மறுதினமே இரண்டு மாத லீவு வாங்கிக்கொண்டு புதிய தம்பதிகள் ஜம்மென்று வெளியூர்கள் சுற்றப்போய்விட்டார்கள். பார்வதியம்மாள் நினைத்தபடி தன்னிடம் இல்லாதது சற்று குறையாகவே இருந்ததெனினும் யாரிடம் அதைக் கூறமுடியும்?

'கல்யாணம் ஆகிவிட்டதே! எங்கே கிருபாவதி குழந்தையைக் கேட்கவந்துவிடுவளோ!' என்கிற பயமும் புகுந்துகொண்டு, அவள் வராதிருக்கவேண்டுமே என்று ப்ரார்த்தனையும் செய்தாள். ப்ரேமா வெகு மேன்மையான முறையில் செழுசெழு என்று வளர்ந்து மழலை மொழிகளை மலர்போல் உதிர்த்து மகிழச் செய்வதைக் காணக்காண விச்வநாதனுக்கு நினைவு முற்றும் கிருபாவதியின்மீதே சென்று லயித்தது. அவளைக்கொண்டுவிட்டபிறகு இதுவரையில் எவ்விதமான தகவலும் தெரியாததால் இப்போது எப்படியிருக்கிறாள் பார்க்கவேண்டும்என்கிற ஆவல் அவரை வாட்டியது. பத்திரகாளிக்குத்தெரிந்து போவதென்பது முடவன் கொம்புத்தேனைப் பருகுவ்துபோலத்தானாகுமாதலால் அவளுக்குத் தெரியாமல் எங்கேயோ காரியமாய்ப்போவதாகக் கூறி சதாசிவன் வீட்டிற்கு வந்தார்.

வீட்டின் முன்பக்கமே பெரிதாக மெத்தைக் கட்டிடம் எழும்பியிருப்பதையும், வீதியில் ஒரு வக்கீலின் போர்டு மாட்டப்பட்டிருப்பதையும் கண்டு திடுக்கிட்டுத் திகைத்து நின்றார். ஒன்றுமே விளங்காது வீதியில் இங்கும் அங்கும் உலாவினார். வீட்டில் நடமாடும் முகங்களெல்லாம் புதிதாகத் தோன்றியதால் யாரிடம் விசாரிப்பது என்றும் தெரியாது விழித்தார்.

18308

நல்லவேளையாக அந்த பக்கம்வந்த தபால்காரனை "ஏனப்பா இந்த வீட்டில் வேறு யாருடைய போர்டோ மாட்டியிருக்கிறதே, சதாசிவம் என்பவர் முன்பு இங்கிருந்தாரே, அவர் இப்போது எங்கிருக்கிறார்?'' என்று கேட்டார்.

பழைய தபால்காரனாகையால், அவனுக்கு விவரங்கள் நன்றாகத் தெரியுமாதலால், "அவரா!... அவர் தேசயாத்திரை போய் எத்தனையோ மாதமாகிவிட்டதே, இந்த வீட்டை இவர்கள் புதிதாக வாங்கிக் கட்டிக்கொண்டு வந்திருக்கிறார்கள்'' என்று கூறிச் சென்றான்.

இவ்வார்த்தைகள் விச்வநாதன் இதயத்தில் சுரீரென்று நெருப்புபோல் பாய்ந்து, அவரால் நிற்கவும் முடியாது தேகமே ஆடியது. தலை சுழன்றது. என்னென்னவோ எண்ணங்கள் தோன்றி வதைக்கின்றன... "கிருபாவதியின் கதி!... கிருபாவதி எங்கே?... கிருபாவதி என்னவானாள்?''... என்கிற கேள்விகள் குபீர் குபீர் என்று அவர் இதயத்திலிருந்து கிளம்பி எதிரொலியுடன் உறுமுகின்றன... உறைந்த கட்டையைப்போல் அவர் சரீரம் கல்லாய்ச் சமைந்தது.

கூடாதா! நம்மை இங்கு உட்காரவைத்துவிட்டு அங்கு ஒருநாளை கல்யாணத்துக்கு 10,15 ரூபாய்கள் கொடுத்து பாத்திரம் இரவல் வாங்குகிறார்களாம். அதுவும் கிடைக்காது சிலர் திண்டாடுவதை நம்ம செப்புகுடம் பார்த்துவந்ததாம். சொல்லிச் சொல்லிச் சிரித்தது.

செப்புக்குடம்:—சிரிப்பதற்கு ஒன்றா இரண்டா வேடிக்கை? கடையிலிருந்து சாமான்களை முன்பெல்லாம் காகிதத்தில் பொட்டளம் கட்டிக்கொடுப்பார்கள். அதைக் கொண்டுவந்து நம்மிடம் ஒப்புவிப்பார்கள் இப்போதோ ஒரு பவுனுக்கு 80 ரூபாய் என்றாலும் அந்தச் சலிக்காது கொடுத்தால் பவுன் கிடைத்துவிடுகிறது. காரெட்டு 1000 ரூபாய் என்றாலும் வைரம் கிடைத்துவிடுகிறது. ஆயிரம் ஆயிரமாகக் கொட்டினாலும் காகிதம் கிடைப்பதில்லை. சாமான்களை காகிதமோ பாத்திரமோ கொண்டுவந்து எடுத்துப்போகும்படி கடைக்காரன் சொல்கிறான். நம்ம இனத்தைத்தான் பத்திரப்படுத்திவிட்டார்கள். சாமான்களை வைக்க பாத்திரமில்லையே என்று தவித்து சட்டிகள் வாங்கப்போனால் அதுவும் கிராக்கியாகி நமக்குச் சரியான விலையில் உயர்ந்துவிட்டது. சமயல்காரனோ பாத்திரம் போதாமல் நான் என்ன செய்வது என்று கத்துகிறான். இட்டிலியைப் பண்ணி இலையில் கொட்டிவிட்டான். ஆறி அவலாப்போனதோடு எரும்பும் ஈயும் சுத்திக்கொண்டது. சாப்பிடவந்தவர்கள் "ஐயோ, இது எனக்குவேண்டாம்" என்று ஓடினார்கள். நாம் இல்லாததால் எத்தனை நஷ்டம் பாரு. எஜமானர்களின் தலையில் விழுகிற குண்டு நம் தலையிலும் விழட்டுமே என்று தோன்றுவதில்லை. குழந்தைகளை எல்லாம் கூட்டிக்கொண்டு போனவர்களுக்கு நாம்தானா ப்ரமாதமாகத் தோன்றவேண்டும்? சில இடங்களில் பதுக்கி வைத்திருந்த நம்மினத்தவரைத் திருடன் அடித்துக்கொண்டு போய்விட்டானாம். சில இடத்தில் வண்டியில் போகும்போதே வண்டிக்காரனே அமுக்கிவிட்டானாம்.

தூக்குசட்டி, தாளக்கூடை:—இந்த ப்ரமாதம் இப்பவா தெரியப்போகிறது. இந்த கோணியில் நம்மை பத்திரப்படுத்திவிட்டதாக அவர்கள் எண்ணம். கோணியோ செல்லெரித்தும் எலிகடித்தும் கிழிந்துவிட்டது. தேள் கொட்டிக் கொட்டி என் உடம்பில் பல பொத்தல்கள் கண்டுவிட்டன. அந்த குண்டு விழும் அவசரத்தில் என்னை இழுத்துக் கட்டியதில், என் வளையம் உடைந்தது!...என் காது உடைந்தது. அதோ அந்த எண்ணெய்த் தூக்கு நசுங்கியே போய்விட்டது. ஈயத்தவலை ஒரே சப்பையாகிவிட்டது. குத்துவிளக்கின் மூக்கு உடைந்தது. தாம்பாளங்கள் கோணிப்போய்விட்டன. இந்த அலங்கோலங்கள் மூட்டையை அவிழ்க்கும்போதுதானே தெரியப்போகிறது.

வெண்கலப்பானை:—உம். நாமே தேவலையே! ஒரே எஜமானரிடம் இருக்கிறோம் இன்னும் எத்தனைபேர்கள் நம்மினத்தவரை அரைகுறை விலைக்கு விற்றுவிட்டார்கள் தெரியுமா! இப்போது அவர்கள் புதிதாக வாங்குவதென்றால் சவரனும் நாமும் ஒன்றாகவல்லவோ ஆய்விட்டோம். அந்த சுகம் இப்போது தெரிகிறது. தெரிந்து என்ன செய்வது. கல்யாணப்பந்தலில் நாம் பரிமளித்ததுபோல் இப்போது இருக்கிறதா? சிலர் நம்மையே அழகுபடுத்தி வைக்கிறார்கள். சிலரோ அதுவுமில்லை. எல்லாம் காலத்திற்கு ஏற்றகோலம்.

அண்டா:—விலைவாசி ஒருபுறம் இருக்கட்டும். நாம் என்று நமது சுய அதிகாரத்துடன் இருக்கப்போகிறோம் என்றுதான் இப்போது வருத்தமாயிருக்கிறது. இந்த நிலைமையிலேயே நாம் இன்னும் சிலகாலம் இருந்தால் நசுங்கி நாசமாகத்தான் போய்விடுவோம்.

சிப்பல்தட்டு:—மாமீ! கத்தாதங்கோ. கதவு பூட்டு ஓசை கேட்கிறது. ஒருவேளை நம்ம எஜமானர்தான் வந்திருக்கிறாரோ என்னமோ! போனதரம் அவர் வந்தபோது தகரத்தொட்டிக்கும் ஓட்டைபெட்டிக்கும் விமோசனம் பிறந்தது. இப்போது நமக்குப் பிறக்குமோ என்னவோ! பேசாதிருங்கள் ஏதோ பேச்சுக்குரல் கேட்கிறது.

வை.மு.கோ.

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது.

'ரிஷ்ய சிருங்கர்' தமிழ் படத்தில் பிரதம ஸ்திரீபாகம் வகித்தவரும், போப் பாண்டவரால் புகழ்ப்பட்டவரும், இனிய சங்கீத சம்பத்துடையவருமான திறமை வாய்ந்த தென்னிந்திய நடிகை **ஸ்ரீமதி வஸுந்தரா தேவி** சொல்லுகிறார்.

" தனிப்பட்ட நறுமணத்திற்காக நான் எப்பொழுதும் நரஸூஸ் காபி, டியையே உபயோகிக்கிறேன்."

Vasundhara Devi.

நரஸூஸ் காபி

M N K.—16 738.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL, S. O.